உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருவதிகை

தல மான்மியமும் தேவாரப் பதிகங்களும்

திருப்பாதிரிப்புலியூர்

இயற்றமிழாசிரியர் :

க. ரா. சிவசிதம்பர முதலியார் அவர்கள்

எழுதியது

அச்சிட்டவர் :

திருப்பாதிரிப்புலியூர்

ஸ்ரீமத் ஞானியார் மடாலயம்

ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள்

மாணவர்

ப. பாலசுந்தர நயினர்

வாகீசர் புத்தகாலயம், சோழவல்லி, நெல்லிக்குப்பம்

1940

விலை 4 அணா

சாது அச்சுக்கூடம்,
இராயப்பேட்டை, சென்னை.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

மு ன் னு ரை

எப்பிறப்பினும் ஏற்றமாம் இம்மானுடப் பிறப்பெய்தினோர் பெறவேண்டிய சிறந்த பேறு வீடு ஒன்றே அன்றோ. அவ்வீடு சிவஞானத்தாலடைதற்பாலது. அச்சிவஞானம் ஆசாரியனருளும் ஒரு மொழியைப்பெற்று நின்றபோது வரற்பாலது. அவ்வாசாரியர் ஒரு மொழிசொல எதிர்ப்படுவது மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாற்றொடங்கிய காலம். தலத்தில் மூர்த்தியும் தீர்த்தமும் உண்டு. எவரும் தலமடைந்து தீர்த்தத்தில் மூழ்கி மூர்த்தியைக்கண்டு உய்தல் வேண்டும். தலத்தின் பெருமையை அறியாதபோது தலத்தில் அன்பு தோன்றாது. தலங்களோ எண்ணிறந்தன. அதிகம் பெருமையுடைய தலம் ஒன்றாக இருத்தல் வேண்டுமேயன்றிப் பலவாக இருத்தலில்லை. அவ்வதிகம் பெருமையுள்ள தலமே திருவதிகை.

இத்திருவதிகையின் பெருமையைப் பழைய நூல்கள் பல சொல்லும். பாட்டாக இருப்பதினும் வசனமாக இருத்தல் இக்காலத்தில் மிக்க பயனைத்தரும். தலத்தினை தரிசிப்போர் தரிசிப்பதின் முன்பு அத்தலப்பெருமை, அத்தலத்திலுள்ள தீர்த்தப் பெருமை தெரிந்து தரிசித்தல் மிகுந்த பயனைத் தரத்தக்கது. இன்னபல கருதித் திருப்பாதிரிப்புலியூர் சந்நிதி வீதியில் வசித்த இயற்றமிழாசிரியர் திருவாளர் க. ரா. சிவசிதம்பர முதலியார் திருவதிகை மான்மியப் பெயரிய நூலொன்றை உரை நடையாலியற்றினர். அச்சிட்டனர். இப்போது அப்புத்தகம் கிடைத்தலில்லை.

இத்திருவதிகை கும்பாபிடேகம் இவ்விக்கிரம ஆண்டு ஆனித்திங்கள் 10-ஆம் தேதி நடைபெறும். வந்து தரிசிக்கும் அன்பர்கள் படித்துப் பயன்பெறுதற் பொருட்டு இதனை இப்போது

அச்சிடலானேன். இக்காலப் படிப்பில் கல்வெட்டு மொன்றன்றே. ஆதலின் இத்திருவதிகையைப் பற்றிய கல்வெட்டொடு அச்சிடநேர்ந்தது. தலங்களுள் தேவாரம்பெற்ற தலமே முன்னர் வைகற் பாலது என்னும் கொள்கை வேரூன்றியது. ஆதலின் திருவதிகைக் குரிய மூவர்தேவாரம் முழுதும் அச்சிடப்பட்டுளது. இத்தலத்திற்குத் திருப்புகழ் உண்டா என வினவுகின்றனர். இதற்கு விடையிறுப்பான் திருப்புகழுஞ் சேர்க்கப்பெற்றிருக்கின்றது. இத்தலத்திற் குரிய பெரியநாயகியம்மை, திருநாவுக்கரசு சுவாமிகள், திலகவதியம்மையார் முதலியோர் தோத்திரங்களும் இத்துடன் சேர்க்கப் பெற்றிருக்கின்றன.

திருக்கயிலாய பரம்பரைத் திருத்தருமபுர ஆதீனத்தில் தற்போது எழுந்தருளி அநுக்கிரகிக்கும் இருபத்து நான்காவது பட்டம் குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அறிவும், ஆற்றலும், அமைதியும், அருளும், பக்தியும், குணமும் பண்புடன் பெற்று, ஆலயங்களை அன்புடன் திருப்பணிசெய்தும், தம்பிரான்களைத் தகுதியில் ஆதரித்தும், பச்சை குழந்தைகட்குப் பால் கினைந்தூட்டியும், மாணவர் பலர்க்கு மாதச் சம்பளம் கொடுத்துப் படிக்கச்செய்தும், இலவசமாகப் புத்தகங்களை அச்சியற்றி புகழ்படக் கொடுத்தும், புலவர்களை ஆதரித்துச் சமயப் பிரசாரம் செய்வித்தும் வருந் தன்மை முதலியவற்றைக் கேள்வியுற்ற அடியேன், நிகழும் விக்கிரம ஆண்டு வைகாசித் திங்கள் 14-ஆம் தேதி நடந்த ஆதிகுரு ஞானசம்பந்த சுவாமிகள் குருபூசைக்குச் சென்றேன். அங்கு, குருபூசைக்கு எழுந்தருளி யிருந்த திருக்கடவூர் கட்டளை ஸ்ரீமத் - இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகளிடம் அடியேனின் வணக்கத்தைச் செலுத்தி இப் புத்தகப் பணியை அறிவித்தேன். ஸ்ரீ தம்பிரான் சுவாமிகள் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தை, அடியேன் தரிசிக்குமாறு செய் வித்து, புத்தக விஷயத்தை விண்ணப்பித்தார்கள். ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் இப்புத்தகத்தை அச்சிடவேண்டிய செலவுகளை ஆதீனத்திலிருந்தே செய்து தருகின்றோம் எனப்பெருங்கருணை புரிந்து, அவ்வாறே செய்துதந்தார்கள். "வேண்டுவார் வேண்டுவதே

ஈவான் கண்டாய்" என்பது நம் அப்பமூர்த்திகள் வாக்கு. இறைவனே,

குமர குருபரன் கோதறப் போற்றிய
குருமர பதனில் குணப்பெரும் வடிவாய்
புவியிடை வந்தநற் புண்ணிய முதலாம்

ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்பால் அவ்வுண்மை காணப்பட்டது. இப்பேரருளாளன் செய்த உபகாரத்தை என்னெனப் போற்றுவது. நன்றிமறவேன். நன்றி மறவேன்.

ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தின் திவ்விய திருவடிகளைப் பன்முறை வாயார வாழ்த்தி வணங்குதலேயன்றி அடியேன் செய்யும் கைம்மாறறியேன்.

இப்பேற்றினை எனக்கு ஆக்குவித்த திருக்கடவூர் கட்டளை ஸ்ரீமத் - இராமலிங்கத்தம்பிரான் சுவாமிகள் அவர்களுக்கு என்றும் மறவா நன்றியோடு என் வணக்கத்தைச் செலுத்துகின்றேன்.

எண்ணியவொன்றை எண்ணியாங்கு முற்றுவித்த அதிகை நாதன் திருவடியைப் பன்முறை இறைஞ்சுகின்றேன்.

இங்ஙனம் :

ப. பாலசுந்தரம்.

உ

சிவமயம்

இதிலடங்கியவை



திருக்கயிலாய பரம்பரைத் திருத்தருமபுர ஆதீனம்,

௨௪-வது மகா சந்நிதானம்,

ஸ்ரீ சண்முகதேசிக பரமாசார்ய சுவாமிகள்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருவதிகை மான்மியம்

முதலாவது

திருவதிகை மகிமைச் சருக்கம்

வேதாந்த சாத்திரங்களிலே பரப்பிரமமென்றும், சைவசித்தாந்த சாத்திரங்களிலே பரசிவமென்றும், சமரச நூல்களிலே பரமென்றும் சொல்லப்படுகின்ற ஏகனுகிய பரமாத்மா எவரோ! அவரே ஆண்டவராகிய நங்கள் சிவ பெருமான். அநேகராகிய ஜீவாத்மாக்களெல்லாம் அவருக்கு என்றும் அடிமைகளேயாம். சர்வஞானமும், சர்வவல்லபமும், சர்வஅநுக்கிரகமுமுடைய தலைவராகிய அச்சிவபெருமான் தாம் ஒன்றினும் தாக்கற்று நிற்பவரேயாயினும், அடிமைகளை யிரட்சிக்கும் பொருட்டு அண்டபிண்ட சராசரமாகிய பிரபஞ்சமெங்கும் நீக்கமற நிறைந்து நிற்பர். ஆதலால் எவ்விடமும் அவர் சந்நிதியேயாம். ஆயினும் இந்த உண்மை அநுபூதிமான்களாகிய சிவயோகிகளுக்கும், சிவ ஞானிகளுக்கும் தெரிவதல்லது ஏனையோர்க்கு விளங்காது. ஆகவே அடிமைகளாகிய ஜீவகோடிகள் ஆண்டவனை யறிந்து வழிபட்டுய்வதும் கூடாதாய்விடும். ஆதலால் இதனைக் கிருபாநிதியாகிய சிவபெருமான் தாமே திருவுளத்திற் கொண்டு யாவரும் தம்மை எளிதிற் கண்டு வழிபட்டுய்யும் பொருட்டுப் பூமியின் கண்ணே எண்ணிறந்த திவ்விய

ஸ்தலங்களை வைத்தருளி, ஆங்காங்குத் தாமே சாந்நித்திய மாய் நின்று, அன்பு செய்யும் அடியார்களுக்குச் சாந்தமூர்த்தி யாய் எழுந்தருளி வந்து அறக்கருணை புரிவதன்றியும், வன்பு செய்யுங் கொடியோர்களுக்கு உக்கிரமூர்த்தியாய் எழுந்தருளி வந்து மறக்கருணையும் புரிந்தருளுவர். அப்படிச் சிவபெரு மான் உக்கிரமூர்த்தியாய் எழுந்தருளி வந்து மறக்கருணை புரிந்த வீரட்டானங்கள் எட்டாம். அவை வருமாறு :—

1. திருக்கண்டியூர்—பிரமனைச் சிரங்கொய்த ஸ்தானம்
2. திருக்கோவலூர்—அந்தகாசுரனைக் கொன்ற ஸ்தானம்
3. திருவதிகை—திரிபுரதகனம் செய்த ஸ்தானம்
4. திருப்பறியலூர்—தக்கன் சிரத்தைத் தடிந்த ஸ்தானம்
5. திருவிற்குடி—சலந்தரனைத் தலையரிந்த ஸ்தானம்
6. திருப்பழுவூர்—யானையை யுரித்தணிந்த ஸ்தானம்
7. திருக்குறுக்கை—மன்மதனை யெரித்த ஸ்தானம்
8. திருக்கடவூர்—இயமனை யுதைத்த ஸ்தானம்.

வீரஸ்தானம் - வீரட்டானம் எனமரீஇயிற்று.

“ பூமன் சிரங்கண்டி யந்தகன் கோவல் புரமதிகை
மாமன் பறியல் சலந்தரன் விற்குடி மாப்பழுவூர்
காமன் குறுக்கை யமன்கட வூரிந்தக் காசினியில்
தேமன்னு கொன்றையுந் திங்களுஞ் சூடிதன் சேவகமே ”

இந்த எட்டனுள் மூன்றுவதாகிய திருவதிகை வீரட் டானமென்னும் திவ்வியக்ஷேத்திரமானது பரதகண்டத்திலே தமிழ் வழங்கு நிலத்திலே தெற்கே சுவேதநதியென்னும் வெள்ளாற்றையும், வடக்கே பினாகி நதியென்னும் பெண்ணை யாற்றையும் தனக்கெல்லையாகவுடைய திருமுனைப்பாடி நாட் டிலே கெடில நதிக்கு வடகரையிலுள்ளது. இது பஞ்சக் குரோச விஸ்தீரணமுள்ள நகரமாம். குரோசம் - இரண் டரைக் கடிகை தூரம்.

இது எல்லா ஸ்தலங்களிலும் அதிகம் ஆதலால் திரு அதிகை எனப் பெயர் பெற்றது. அன்றியும் ஆதிகாலத்திலே உண்டாக்கப்படுதலால் ஆதிபுரி என்றும், அரியாகிய விஷ்ணு மூர்த்தியினால் உண்டாக்கப்பட்டதனால் அரிநகர மென்றும், நகரமாவதற்குமுன் சரக்கொன்றைக் காடாயிருந்தமையால் கொன்றைவன க்ஷேத்திரமென்றும் இதற்குப் பெயர். இந்தத் தலத்தில் அரி அயன் முதலிய தேவர்களும், திரிபுராதியரும், கருடனும், தருமன் முதலிய பாண்டவர்களும், இன்னும் அநேகரும் சிவபிரானைப் பூசித்துத் தவஞ் செய்து பேறு பெற்றிருக்கின்றனர்.

திருஞானசம்பந்த சுவாமிகள் இத்தலத்திற் கெழுந்தருளிக் "குண்டைக் குறட்பூதம்" என்னும் திருப்பதிகம் அருளிச்செய்த காலத்தில் சிவபெருமான் சிவலிங்கத்திற்றோன்றி நடன தரிசனந் தந்தருளினர்.

சமண் மதம் புகுந்திருந்த திருநாவுக்கரசு சுவாமிகளுக்குச் சிவபிரான் சூலைநோய் விடுத்து அவரை அடிமை கொண்டதும், அவர் அந்நோய் நீங்கும்பொருட்டு "கூற்றாயின" என்னும் ஆதிதேவாரம் அருளிச் செய்யப்பெற்றதும், அந்நாவரசு நெடுநாளமர்ந்திருந்து வாய்த்தொண்டோடு கைத்தொண்டாகிய உழவாரத் திருப்பணி செய்யப்பெற்றதும் இத்தலமேயாம்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தலயாத்திரைக் கெழுந்தருளியபோது "இது திருநாவுக்கரசு சுவாமிகள் தமது திருக்கரம் வருந்திச்செய்த உழவாரத் திருத்தொண்டை ஏற்ற தலமாதலால் இதனை மிதிக்க அஞ்சுகின்றேன்" என்று பிரதக்ஷணமாகச் சூழ்ந்துபோய்ச் சித்தவட மடத்தில் இராத் தங்கி நித்திரை செய்தனர். அப்போது இத்தலத்தில் அமர்ந்தருளிய வீரட்டேசர் ஒரு விருத்தப் பிராமணராகிச் சென்று இருமுறை அவர் சிரசின்மேலே தமது திருவடிகளை நீட்ட,

சுந்தரமூர்த்தி 'இங்கே என்னைப் பலமுறை மிதித்த நீர் யார்'? என்று கேட்டார். உடனே சிவபெருமான் 'என்னை நீ அறியாயா' என்று சொல்லி மறைந்தருள, சுந்தரமூர்த்தி தம்மை மிதித்தவர் கடவுளே என்றுணர்ந்து 'ஓ ஓ தமியேன் ஆண்டவனை யறியாது என்ன செய்தேன்' என்று சொல்லி வீரட்டேசுவரர்மேல், 'தம்மானை யறியாத சாதியா ருளரே' என்னும் திருப்பதிகம் பாடினார்.

திருநாவுக்கரசு சுவாமிகள் தமக்கையாராகிய திலகவதியார் இந்த க்ஷேத்திரத்திலே சிவபிரான் கோயிலில் திருவலகிடுதல், திருமெழுக்கிடுதல், திருவிளக் கேற்றல், புஷ்பங் கொய்து கொண்டுவந்து திருப்பள்ளித் தாமம் புனைந்து கொடுத்தல் முதலிய சிவபுண்ணியங்களை நெடுநாட் செய்து கொண்டிருந்து சிவகதியடைந்தார்.

இன்னும் இத்தலத்திலே தொண்டுசெய்து பேறு பெற்றவர்களை எல்லாம் எடுத்துச் சொல்லவென்றால் ஆதிசேடனாலும் முடியாது.

இந்த க்ஷேத்திரத்தின் தொன்மையைக் குறித்து

"எண்ணுடை மூவ ரிராக்கதர்க ளெரிபிழைத்துக்
கண்ணுத லெந்தை கடைத்தலைமுன் னின்றதற்பின்
எண்ணிலி யிந்திர ரெத்தனையோ பிரமர்களும்
மண்மிசை மால்பலர் மாண்டனர்காண் டோணோக்கம்"

என மாணிக்கவாசக சுவாமிகளும்,

"அப்புர மெய்தமை யாரறிவாரே"

எனத் திருமூல தேவரும் கூறியிருக்கின்றனர்.

நித்தியர்களாகிய நாதர்களே இங்ஙனங் கூறியிருப்பாராயின், அற்ப ஆயுளும் அதிற்பல நோய்களும் முக்குண வாசத்தால் முறை பிறழும் சிற்றறிவுடைய மனிதர்களோ இத்தலத்தின் மூலங் கண்டறிந்து சொல்லவல்லவர்?

புராதனதலங்கள் ஒவ்வொன்றின் மூலமும் இப்படியே அறிதற் கருமையாக விருக்கும். இந்த உண்மை யறிய மாட்டாதார் சிலர், நூதன சமயிகள் சிற்சிலர் இக்காலத்தில் ஏற்படுத்திக் கொள்ளும் சிற்றாலயங்களைப்போல் எண்ணி, புராதனமாகிய நங்கள் முக்கிய தலங்கள் ஒவ்வொன்றைக் குறித்து, இது எந்தக் காலத்திலுண்டானது? யாவரா லுண்டானது? அப்படி உண்டானதற்குக் காரணம் யாது? என்று விசாரிக்க வருவர். அவர்க்கு யாங்கூறும் மறுமாற்ற மென்னிருக்கின்றது.

எப்போது பூமியும், பூமியில் மனுக்களும், மனுக் களுக்கு விவேகமும் தோன்றினவோ, அப்போதே தலங் களும் தலங்களில் அன்பர்களும், அன்பர்களுக்கு அனுக் கிரகமும் உண்டாயிருக்கு மென்றறிக.

தானதருமங்களும், பூசை ஜெபதபங்களும் ஆகிய இவைகள் எவ்விடத்துச் செய்யினும் பலன் தருமாகினும், எல்லாத் தலங்களிலும் அதிகமாகிய இந்தத் திருவதிகையிற் செய்யின் ஒன்று அனந்தமாகிப் பெரும் பலன் உடனே தரும் என்பது சத்தியம்.

இத்தலத்தில் சிவாலய திருப்பணி முதலிய சிவ புண்ணியங்களை இடையறாப் பேரன்போடு செய்து வரும் புண்ணியவான்கள் அடையும் நித்தியானந்த முத்திப் பயனை அளவிட்டுச் சொல்ல வல்லவர் யாவர். அது அவர்களுக்கும் சிவபிரானுக்குமே தெரியும்.

இரண்டாவது

வீரட்டான லிங்கோற்பவச் சருக்கம்

இந்தத் திருவதிகையென்னும் மகாக்ஷேத்திரத்திலே வீரட்டானேசுரராகிய சிவலிங்கப் பெருமான் திரிபுர சுந்தரியென்னும் தேவியாருடனும், விநாயகக் கடவுள், சுப்பிரமணியக் கடவுள், வைரவக் கடவுள், சண்டேசுரர் என்னும் மைந்தர்களுடனும் மற்றும் பரிவார தேவர்களுடனும் வீற்றிருந்து அன்பர்களுக்கு அநுக்கிரகம் செய்து வருவர்.

அவர் ஆதியிலே இவ்விடத்து முளைத்தெழுந்ததற்குக் காரணம் யாதெனில்:

பூர்வம் தேவர்களையும் அசுரர்களையும் சேனைகளாகக் கூட்டிப்போய் திருப்பாற்கடல் கடைந்து அமிர்தந்திரட்டிய கபடநாடக சூத்திரியாகிய மகாவிஷ்ணுவானவர் அசுரரை வஞ்சித்துத் தேவர்களுக்கு அமிர்தங் கொடுக்கு நிமித்தம் மோகினிரூபங் கொண்டாரென்பது பிரசித்தியல்லவா? அந்த அரிமோகினி தேவர்களுக்கு அமிர்தம் பகிர்ந்தளித்து விட்டு ஆனந்த பரவசையாய் உல்லாசத்தோடு உலாவித்திரிகையில் இந்தக் கொன்றை வனத்தைக் குறுகினர். அப்போது ஸ்ரீகண்ட மூர்த்தியாகிய சிவபிரான் யதேச்சையாய் அவ்வனத்தைச் சார்ந்து, ஆங்குத் தண்ணிழல் கொண்டு தழைத்தோங்கியிருந்த காட்டாத்தி விருக்ஷத்தின் நிழலிற் றனித்திருந்த மோகினியைக் கண்டு, தாம் அவள்மேல் மோகங் கொண்டவர்போல நடித்துக்காட்டி "பெண்ணே நாம் முன்னொரு காலத்தில் தாருகாவனத்து ரிஷிகளின் மமதையை யடக்கும் பொருட்டுப் பிக்ஷாடன ரூபங்கொண்டு வந்தோம். அப்போது நீயும் இவ்வடிவத்தோடு வந்து நமது திருமேனியின் அதிமோகன சவுந்தரியத்தைக் கண்டு மயங்கி நம்மைத் தழுவவேண்டுமெனக் காதல் கொண்டாய். ஆதலால் அக்கா

தலை இப்போது தணிப்பிக்கிறோம்" என்று சொல்லி, பூமி பரி பாலனத்துக்காகச் சாத்தனைத்தரும் பொருட்டு அம்மோகி னியைக் கூடினார்.

அப்போது அக்கினி சொரூபராகிய சிவபெருமானுடைய திருமேனியின் வெம்மை சகிக்கமாட்டாமல் மோகினியின் சரீரமெங்கும் வியர்த்து, அந்த வியர்வை நீரெல்லாந் திரண்டு ஒரு நதியாய்ப் பெருகிற்று. அதுவே கெடிலநதியாம். உடனே சாத்தனாகிய ஐயனார் தோன்றினார். அரியாகிய மோகினிக்கும் அரனாகிய ஸ்ரீகண்டருக்கும் பிறந்தமையால் அவருக்கு அரிகர புத்திரரென்று பெயராயிற்று. அந்த அரிகர புத்திரருக்கு க்ஷேத்திரபால அதிகாரமும், மற்றும் வேண்டிய வரங்களும் கொடுத்துவிட்டுச் சிவபிரான் மறைந் தருளினார்.

நாயகன் மறைந்து போகவே நாயகியாகிய அரிமோகினி அதிவருத்தமுற்று, "எடுத்த வுடலுக்கியைந்த குணம் மாறாது" என்பதனால் சிறிது நேரம் பேதைமையாற் பிர லாபித்து, அப்பால் மையலால் மயங்கிய மதிமயக்கம் ஒரு வாறு தெளிந்து, விஷ்ணுவாகிய தன் சுயரூபத்தைக் கொள்ளும்படி முயன்று பார்த்தும் முடியாமையால் தவஞ் செய்யத் தொடங்கினாள்.

அரிமோகினி தினந்தோறும் சூரியோதயத்துக்கு முன் எழுந்து விதிப்படி கெடில நதியில் ஸ்நானம் பண்ணி, விபூதி உருத்திராக்ஷங்களாகிய சிவசின்னங்களைத் தரித்துக்கொண்டு சிவபூசையும், ஸ்ரீ பஞ்சாக்ஷர ஜெபமும் செய்து முடித்து, அப்பால் தெற்பாசனத்தில் இருந்துகொண்டு பஞ்சேந்திரியம் அடக்கி ஏகாக்கிர சித்தத்தோடு சிவயோக சமாதி நிஷ்டை கூடுவள். இப்படியாக ஒரு வருஷகாலம் பத்தி வைராக்கியத் தோடு அருந்தவஞ் செய்து வந்தாள்.

சர்வ வியாபியாகிய சிவபெருமான் இதனை உணர்ந்து தமது சத்தியின் அமிசராகிய விஷ்ணு மோகினிக்கு அருள் செய்யும்பொருட்டு வருஷாந்தமாகிய தவ முடிவில் பூமி யதிர்ந்து படீரென்று வெடிக்க அதன் வழியாய் சத்த பாதலத்தையும் ஊடுருவிக்கொண்டு தேஜோமய ஸ்தம்பாகார சுயம்பு *இலிங்க சொரூபியாய்த் தோன்றி விளங்கினர். அப்போது அமிர்தபானம் பண்ணி அகங்களித்திருந்த தேவர்களெல்லாம் புஷ்ப வருஷம் பொழிந்தார்கள்.

தவநிஷ்டை கூடியிருந்த அரிமோகினி திடுக்கிட்டு எழுந்து விழித்துப் பார்க்கையில் தனக்கு முன் என்றுங் காணப்படாத சிவலிங்கப் பெருமான் அப்போது அதியற்புதப் பேரொளிப் பிழம்பாயெழுந்து விளங்குதலைக்கண்டு பேரானந்த சாகரத்தில் மூழ்கிச் சற்றுநேரம் ஒன்றுந் தோற்றமல் பரவசப்பட்டு நின்றுள். இதுவே வீரட்டானேசுர லிங்கோற்பவம்.

---

*லிங் - என்பது சிவம், கம் என்பது சொரூபம். ஆதலால் லிங்கம் என்பது சிவசொரூபமெனவறிக.

சிவசொரூபமாகிய லிங்காகாரம் ஸ்ரீ பிரணவ பஞ்சாக்ஷர வடிவமாம். எங்ஙனமென்னில் ஓங்காரம் அடிப்பீடம், அகாரம் நடுக்கண்டம், உகாரம் மேற்பீடம், மகாரம் மேற்பீடத்தினுள் வட்டம், விந்து லிங்க வட்டம், நாதம் லிங்கம், இது வாசக மந்திரமாகிய கற்பித வடிவம். அடிப்பீடம் கிரியாசக்தி, நடுக்கண்டம் ஞானசக்தி, மேற்பீடம் இச்சாசத்தி, மேற்பீடத்தினுள் வட்டம் ஆதிசத்தி, லிங்கவட்டம் பராசத்தி, லிங்கம் சிவம். இதுவாச்சிய மந்திரமாகிய உண்மை வடிவம். இதன் உள்ளீடாகிய உண்மைகளையெல்லாங் குருமுகமாய் விசாரித்துணர்க. இந்த உண்மையறியாதார் சிவலிங்க வடிவத்தை வேறுவிதமாகக் கூறுவர்.

மூன்றாவது

கெடில மகிமைச் சருக்கம்

சிவபெருமான் அரிமோகினிக்கு அருள்செய்ய வேண்டி அச்சிவலிங்கத்தினின்றும் காளகண்டமும், திரிநேத்திரமும், சதுர்புஜமுமாக அதிசுந்தர அற்புதத் திருவுருவா யெழுந்தருளி வந்து "பெண்ணே! உனது தவ நிலைமைகண்டு மன மகிழ்ந்தோம். நீ யாது காரணமாகத் தவஞ்செய்கின்றாய்? உனக்கு வேண்டிய வரம் யாது? கேள்" என்று திருவாய் மலர்ந்தருளினார். அது கேட்டு அரிமோகினி பேரானந்தங் கொண்டு, உள்ள நெக்குருக உரோமஞ் சிலிர்ப்பக், கண்களில் ஆனந்த பாஷ்பஞ் சொரியச், சிவபெருமான் திருவடிகளில் பலமுறை பணிந்து எழுந்து நின்று, நாத்தழும்பப் பலவாறு துதிசெய்து, "சுவாமீ! அடியேனுக்குப் பேதைமை நிறைந்த இப்பெண்ணுருவம் நீங்கிப் பழைய படியே விஷ்ணுவாகிய என் சுவயரூபத்தை நான் அடையும்படிக்கு அநுக்கிரகம் பண்ணவேண்டும்" என்று சொல்லி மீட்டும் நமஸ்கரித்தாள்.

அப்படி நமஸ்கரித்த விஷ்ணு மோகினியை எம்பெருமானார் தமது திருக்கரத்தால் எடுத்தணைத்து உச்சிமோந்து, "நமது சக்தி வடிவாகிய பெண்ணே! உன்னாலாகாததொன்றுளதோ! ஆயினும் நம்மை பெருமைப்படுத்த வேண்டியிப்படிச் சொல்கின்றாய்; அப்படியே உன் சுவயரூபத்தை நீயடையக் கடவை" என்று கிருபையினால் மோகினியின் சரீரத்தைத் தடவிக்கொடுத்தார். உடனே விஷ்ணுவானவர் மோகினிரூபம் நீங்கிச் சங்கு சக்ராயுத பாணியாய் நீலமேக வண்ணனாய் நின்றார்.

சுவயரூபம் பெற்றுநின்ற திருமாலைநோக்கி கருணைக் கடலாகிய சிவபெருமான் "இன்னும் உமக்கு வேண்டிய

வரத்தைக் கேளும்" என்றருள, திருமால் மீட்டும் வணங்கிக் "கிருபாநிதியாகிய எங்களிறைவனே! தேவரீர் என்பொருட்டு எழுந்து விளங்கும் இந்தச் சிவலிங்க வடிவத்தில் எப்போதும் சாந்நித்தியமாய் நின்று அன்பர்களுக்கு அநுக்கிரகம் செய்து கொண்டிருக்க வேண்டும்; உமது கலப்பினால் என் சரீரத்தின் வியர்வை வடிவாய் உண்டான இந்தக் கெடிலநதி என்றும் வற்று வளத்ததாய் வயங்கவேண்டும்; அதில் விதிப்படி ஸ்நானம் செய்வோர் இகபர இஷ்ட காமியார்த்த சித்திகளை யெல்லாம் அடையவேண்டும்" என வேண்டிக் கொள்ள, சிவபிரான் கருணை கூர்ந்து "அப்படியே தந்தருளினோம், நீரும் நம்மைவிட்டுப் பிரியாது இத்தலத்தில் வசித்திரும்" என்று சொல்லி யாவருங் காணத் தேஜோமய மகாலிங்கத்தில் அந்தர்க்கதமாயினர்.

ஆதலால் அரிஹரசம்பந்த வியர்வையில் எழுந்த நதியாகிய இந்தக் கெடில நதியில் விதிப்படி ஸ்நானம்பண்ணி வீரட்டானேசுரராகிய சிவபெருமானைத் தரிசித்துப் பூசிக்கப் பெற்றோர் யாரோ அவர்கள் இகபர சவுபாக்கியங்களை யினிது பெற்று நெடுநாள் வாழ்ந்திருந்து இறுதியில் சிவகதியடைவர் என்பது நிச்சயம்.

இந்தக் கெடில நதியும் கங்காநதியும் சமம். எங்ஙன மெனில், கெடிலநதி சத்தி சிவசொரூபர்களாகிய அரிஹர சம்பந்த வியர்வையால் எழுந்தது. அரி சத்தி சொரூபர் என்பதை

"அரியலாற் றேவி யில்லை ஐயனை யாறனார்க்கே"

என்னும் தேவாரத்தாலறிக. அன்றியும் அரன் என்பதில் அன் ஈறு ஆண்பால் குறிப்பதும், அரி என்பதில் இகர ஈறு பெண்பால் குறிப்பதும் இக்காலத்துச் சிறுவரும் அறிவர் அது நிற்க.

கங்கையோவெனில், அதுவும் உமாதேவியார் சிவபிரான் திருக்கண் புதைத்த காலத்தில் நெற்றிக்கண் வெம்மைத் தாக்கி உமாதேவியார் திருக்கரத்து எழுந்த வியர்வை நீரே யாம். ஆகலின் இரண்டற்கும் வேற்றுமையில்லை. ஆனால் அது வடதிசைக் கங்கை, இது தென்றிசைக் கங்கை. இக்கருத்துப் பற்றியன்றோ திருநாவுக்கரசு சுவாமிகளும் தேவாரத்தில்,

"அங்கையி லனலெரி யேந்தி யாறெனும்
மங்கையைச் சடையிடை மணப்பர் மால்வரை
நங்கையைப் பாகமு நயப்பர் தென்றிசைக்
கெங்கைய தெனப்படுங் கெடில வாணரே"

எனவும், சேக்கிழார் சுவாமிகள் பெரிய புராணத்தில்,

"தென்றிசையிற் கங்கையெனுந் திருக்கெடிலந் திளைத்தாடி"

எனவும் அருளிச் செய்திருக்கின்றனர்.

தென்றிசைக் கங்கையாகிய இந்தத் திருக்கெடில நதி சிவசத்தி வடிவம். அதிலே வருஷப் பிறப்பு, மாசப் பிறப்பு, உத்ராயணம், தக்ஷிணாயனம், விதிபாதயோகம், அமாவாசை, பூரணை, ஏகாதசி, அஷ்டமி, சஷ்டி, சதுர்த்தசி, சூரிய சந்திர கிரகண காலம், பிரதோஷ காலம் *அர்த்தோதய, மகோதய புண்ணிய காலம் இவைகளில் ஸ்நானஞ் செய்தல் மகா விசேஷம். வைகாசிமீ பௌரணையில் ஸ்நானஞ் செய்தல் அதனிலும் பெரும் புண்ணியம். ஐப்பசிமீ கந்தர் சஷ்டியில் ஸ்நானஞ் செய்த சுமங்கலிகள் புத்திரப்பேறு அடைவார்கள்.

---

* அர்த்தோதயமாவது :—வைகாசி மாதத்தில் ஆதிவாரமும், அமாவாசை ஆதியும், திருவோண நடுவும், விதிபாதயோக அந்தமும் கூடி வருகிற அருணோதய காலம்.

மகோதயமாவது :—ஷை மாதத்தில் சோமவாரத்திலே மேற் கூறியவைகளெல்லாங் கூடிவரும் அருணோதய காலம்.

நான்காவது

திருவிழாச் சருக்கம்

மோகினி ரூபம் நீங்கிய விஷ்ணு மூர்த்தியானவர் சிவபிரான் சிவலிங்கத்திற் பிரவேசித்த பின் அவருக்கு ஆலயம் நிருமிக்கவேண்டி, விஸ்வ பிரம்மாவைக் கொண்டு சிற்ப சாஸ்திர விதிப்படிக்குக் கெற்பக்கிரகம், அந்தராளம், அர்த்த மண்டபம், மகாமண்டப முதலியவற்றோடுங் கூடிய திருக் கோயிலும், திருமாளிகைகளும், யாகசாலைகளும், திருமதில் களும், திருக்கோபுரங்களும், பிறவும் சமைப்பித்து அதைச் சூழப் பஞ்சக்ரோச விஸ்தீரணத்தில் சிவத்துவிஜர்களும், ஏனை நான்கு வருணத்தோர்களும், அநுலோம பிரதிலோமர் களும், பிறரும் வசிக்கும்படியாய்ச் சகல வளப்பங்களோடு கூடி எழுநூறு வீதிகளடங்கிய நகரமும், அதற்கு இடையிடையே பூந்தடங்களும், பூஞ்சோலைகளும், சாலைகளும், பிறவும் உண்டாக்குவித்து, அந்நகரத்தில் நல்ல சுபமுகூர்த் தத்திலே ஆதிசைவர் முதலிய யாவரையும் மங்கலகரமாய் வாழ்ந்திருக்கும்படியாகக் குடிபுகுவித்தார்.

உலக ரக்ஷகராகிய திருமால் உயிர்களின்மேல் வைத்த பெருங்கருணையால் உலகத்தோர்க்குச் சிவபுண்ணியங்களைச் செய்து காட்ட விரும்பி, திருக்கோயிலில் வேண்டிய அங்கங் களை எல்லாம் குறைவற அமைப்பித்து, மூலலிங்கத்துக்கும், தேவியார், விநாயகக்கடவுள், சுப்பிரமணியக் கடவுள் முதலி யோர்க்கும், பரிவார தேவர்களுக்கும் வேதசிவாகம விதிப் படிக்குக் கும்பாபிஷேகமும் செய்வித்தார்.

அப்பால் சிவபிரான் வீதிக்கெழுந்தருளி வந்து யாவர்க் குங் காட்சி கொடுத்துச் சிவபுண்ணியங்களை முதிர்விப்பதற் கேதுவாகிய மகோற்சவம் செய்விக்க விரும்பி, திருக்கோயிலை யும் திருநகரத்தையும் அலங்கிருதம் செய்வித்து, வைகாசிமீ

பூர்வபக்ஷத்தில் பூசநக்ஷத்திரத்திலே மகாவைபவத்துடனே காமிகாகம விதிப்படி துஜாரோகணம் செய்வித்தார்.

மகோற்சவதரிசனம் செய்யும் பொருட்டு, சுவர்க்க மத்திய பாதலமாகிய மூவுலகத்தாரும் திருவதிகையில் வந்து கூடினார்கள். அன்று முதல் ஏழுநாளும் காலை மாலை இரண்டு வேளையினும் வீரட்டேசுர உத்சவநாயகரையும், திரிபுர சுந்தரியாகிய தேவியாரையும், விநாயக்கடவுள், சுப்பிரமணியக் கடவுள், சண்டீகேசர்களையும், சுவர்ண விமானங்களிலும் வாகனாதிகளிலும், சர்வ அலங்காரத்துடனே எழுந்தருளப் பண்ணி, முரசு பேரிகை முதலான வாத்தியங்களும், தேவ துந்துமிகளும் முழங்க, ரிஷபக்கொடி முதலிய கொடிகளும், சந்திரவட்டக்குடைகளும், சுருட்டி மகரதோரண முதலிய விருதுகளும், அணியணியாக முன் செல்ல, ஆலவட்டங் களும், வெண்சாமரைகளும் இருபுறமும் மாறிமாறி வீச, இந்திராதி தேவர்கள் இருமருங்கினும் இறைஞ்சி நின்று எத்தெடுப்ப, தும்புருநாரதர் வீணை வாசிக்க, கருடகாந்தருவ சித்தவித்தியாதராதிகள் புடை சூழ்ந்து இன்னிசை யாழ் முதலிய வாசித்து வர, முனிவர் கணங்கள் வாழ்த் தெடுப்ப, வேதபாரகர் சதுர்வேதங்களையும் பாராயணஞ் செய்து வர, பத்தர்குழாங்கள் பணிந்து நின்று அரஹர வென்று ஆரவாரித்துப் போற்ற, இத்தியாதி சகல வைபவத் துடனேயும் பஞ்சமூர்த்திகளையும் திருவீதி உத்சவஞ் செய் வித்து வந்து, எட்டாநாள் சுவாதிநக்ஷத்திரத்தில் மகா ரதோத்சவமும் செய்வித்தார்.

விஷ்ணுமூர்த்தியானவர் தமது சக்கராயுதத்தினால் தாமே யுண்டாக்கியதாகிய சக்கர தீர்த்தத்தில் ஒன்பதா நாளாகிய விசாகநக்ஷத்திர பௌர்ணையில் தீர்த்தவாரி யுத் சவஞ் செய்வித்து, அன்றிரவில் ஆலயத்தில் எங்கும் திரு விளக்குகள் விசேஷமாக ஏற்றுவித்து, மூலவராகிய சிவலிங்

கப்பெருமானுக்கு விசேஷமாக அபிஷேக திரவியங்களைக் கொண்டு மகாஅபிஷேகமும், அப்படியே மகா நைவேத்திய தூபதீபாராதனைகளும் செய்வித்து, திருமால் தரிசித்துப் போற்றி நிற்கையில், சிவபிரான் அந்த வீரட்டானேசுர மகாலிங்கத்தினின்றும், திரிபுராம்பிகை சமேதராய் ரிஷப வாகனத்தில் எழுந்தருளி வந்து காட்சி கொடுத்து "அன்பர்களிற் சிறந்த விஷ்ணுவே! நீர் செய்த திருவிழாவின் சம்பிரமத்தைக் கண்டு மகாசந்துஷ்டி யடைந்தோம்; இனி வருஷந்தோறும் இப்படியே நமக்குத் திருவிழாச் செய்விப்பவர்கள் எவர்களாயினும் அவர்களுக்குச் சதுர்வித புருஷார்த்தங்களும் மற்றும் வேண்டிய வரங்களும் கொடுத்தருள்வோம்; நீர் இந்த ஸ்தலத்தில் உமது பெயரால் ஒரு சிவலிங்கப் பிரதிஷ்டை செய்வித்து அதனை நீர் உம்முடைய காத்தினுற் பூசியும்" என்று சொல்லிவிட்டுச் சுவாமி மூலலிங்கத்தில் மறைந்தருளினர்.

விஷ்ணுமூர்த்தி அது கேட்டுப் பேரானந்தங் கொண்டு பத்துநாள் உற்சவமும், அவரோகணமும் செய்து முடித்து அப்படியே ஒரு சிவலிங்க ஸ்தாபனமும் செய்து பூசித்திருந்தார்.

அந்த விஷ்ணு லிங்கத்தைப் பூசித்தோர் பிரபல பெரும் பாக்கியங்கள் எல்லாம் அடைந்திருந்து கடைசியில் சிவகதியும் அடைவர்.

வீரட்டானேசுரருக்கு ஆதியில் விஷ்ணு மூர்த்தியானவர் செய்வித்த பிரகாரமே அப்பால் வருஷந்தோறும் தேவர்களும் அரசர்களும் அன்பர்களும் உற்சவம் செய்து வருகின்றனர்.

ஐந்தாவது

பிரமலிங்கச் சருக்கம்

பூர்வம் பிரம விஷ்ணுக்கள் இருவரும் தாம் தாம் பெரிய ரென்று ஒருவரோடொருவர் வாதிட்டுப் பெரும்போர் புரிகையில், சிவபிரான் அவ்விருவர்க்கும் மத்தியிலே ஜோதி ஸ்தம்பமாய் அண்டாண்டங்களையும் ஊடுருவிக்கொண்டு வளர்ந்து நிற்க, அப்போது "இந்த ஸ்தம்பத்தின் அடிமுடிகள் இரண்டில் ஒன்றைக்கண்டு வந்தவர் யாவரோ அவர் தாம் பெரியர்" என்று ஓர் அசரீரி வாக்கு உண்டாக, அது கேட்டுப் பிரமதேவர் "நான் முடிகண்டு வருகிறேன்" என்று அன்னப்பக்ஷி வடிவங்கொண்டு, மேல் நோக்கி நெடுங்காலம் பறந்து சென்றும் முடிகாணக் கூடாமையால் வருந்தி நிற்க ; அப்போது அம்முடியினின்றிழிந்து வருகின்ற ஒரு தாழம் பூவைக்கண்டு அதனைத் தான் முடிகண்டு வந்ததாகச் சாக்ஷி சொல்லும்படி உடன்படுத்திக்கொண்டு வந்து தேவர்கள் நெருங்கிய சிவசந்நிதானத்தில் "நான் இந்த ஸ்தம்பத்தின் முடிகண்டு வந்தேன்" என்று பொய் சொன்னார் என்பதும், அதற்கு அப்படி ஸ்தம்பாகாரமாய் வளர்ந்து நின்ற சிவ பிரான் சினந்து பிரமாவை நோக்கி "ஏ பிரம்மாவே! உமக்கு உலகத்தில் ஆலயமும் பூசனையும் இல்லாமற்போக" என்று சபித்தருளி மறைந்து போயினார் என்பதும் உலகப்பிரசித்தியான வசனமல்லவா? அப்படிச் சிவ அபராதம் செய்த பிரம தேவர்க்கு அறிவு வந்து "ஓகோ! என்ன காரியம் செய்து விட்டோம்; எது வந்தாலும் தப்பித்துக் கொள்ளலாம். சிவ அபராதத்துக்குத் தப்பக்கூடாதே; சிவ சந்நிதியிற் பொய்கூறிய இந்தப் பெருங் குற்றத்தை எப்படித் தீர்த்துக் கொள்ளப் போகிறோம்" என்று நடுநடுங்கி மனம் வாடி நிற்கையில் "பிரம்மாவே! நீர் அஞ்சவேண்டாம், பூமியிலே

எல்லாத் தலங்களினும் அதிகமான அதிகாபுரி யென்னும் மகா க்ஷேத்திரம் இருக்கின்றதல்லவா? நீர் அங்கே போய் நும்பெயரால் ஒரு சிவலிங்கம் ஸ்தாபித்துப் பூசை செய்வீ ராயின், நீர் சிவசந்நிதியிற்கூறிய பொய்யினுல் வருங்குற்றம் தீர்ந்துபோம்; அப்படியே செய்யும்" என்று ஓர் அசரீரி வாக்கு எழுந்தது. அது கேட்டுப் பிரமதேவர் மனோதிடங் கொண்டு, உடனே அதிகாபுரியை யடைந்து அங்குள்ள சக்கர தீர்த்தத்திலே ஸ்நானம் பண்ணி, நித்திய கர்ம்மாதிகளை முடித்துக்கொண்டு, ஸ்ரீ வீரட்டானேசுரரையும், திரிபுர சுந்தரியாரையும் தெரிசித்து வணங்கிக்கொண்டு, அவர்கள் சந்நிதிகளுக்குக் கிழக்கே ஓர் ஆலயம் உண்டாக்கி, அதில் தன் பெயரால் ஒரு சிவலிங்கப் பிரதிஷ்டை செய்வித்து, வேதாகம விதிப்படியே அதனைச் சிலநாள் பூஜித்துவந்து, தைப்பூசத்தில் சுவாமிக்கு மகோற்சவமும் செய்வித்தார்.

உற்சவ முடிவில் சிவபிரான் பிரமதேவருக்கு ஜோதிரூப மாகத் தெரிசனந்தந்து "பிரம்மாவே நீர் செய்தது பெருங் குற்றமே ஆகிலும், உடனே அதற்குப் பயந்து வந்து இந்த அதிகாபுரி க்ஷேத்திரத்தில் நம்மைப் பூசிக்கப் பெற்றமையால் அக்குற்றம் நீங்கிப் போயிற்று; இனி நீர் உம்முடைய சத்தியலோகம்போய் வாழ்ந்திரும்" என்று திருவாய் மலர்ந்தருளி மறைந்து போயினர். பிரமதேவரும் சுவாமி யைத் துதித்து ஏத்தி வணங்கி உத்சவத்தை முற்றுவித்துத் தமது லோகம்போய்ச் சேர்ந்தார்.

பிரமதேவரால் பூசிக்கப்பெற்ற அந்தப் பிரமேச்சுரரைத் தெரிசித்தோர் அபமிருத்து முதலிய குற்றங்கள் நீங்கி ஆயுராரோக்கியம் பெறுவர்.

ஆறவது

திரிபுராதிகள் அரசாட்சிச் சருக்கம்

முன்னொரு கற்பத்திலே பவுத்த மனுவந்தரத்திலே காசிபர் வம்சத்திலே தோன்றிய வலாசுரன் சந்ததியார் தாரகாக்ஷன், கமலாக்ஷன், வித்துன்மாலி என்னும் அசுரர்கள் மூவர் இருந்தார்கள். அவர்கள் முன்னொருதரம் தேவர்களோடு யுத்தஞ் செய்து தோற்று அவமான மடைந்தவர்களாகையால் இனித் தேவர்களை எவ்விதத்திலாயினும் வென்று அடக்கி நமக்கு அடிமைப் படுத்திக் கொள்ளவேண்டுமென்னும் வைராக்கியத்துடனே தங்கள் குலகுருவாகிய சுக்கிர பகவானையடைந்து, அவர் பாதங்களில் பணிந்து எழுந்து நின்று, அவரிடத்தில் தாங்கள் தேவர்களால் பட்ட அவமானத்தையும், தங்கள் கோரிக்கையையும் சொல்லி முறையிட்டார்கள். சுக்கிர பகவான் அவர்கள்மேல் கிருபை கூர்ந்து "பிள்ளைகாள்! நீங்கள் உங்கள் புஜபல பராக்கிரமத்தினலே தேவர்களை வெல்லலா மென்றெதிர்த்து இப்படி அவமானப் பட்டீர்கள். அந்தப் பராக்கிரமம் ஏதுக்குதவும்? யார்க்கும் எந்தக் காரியத்துக்கும் தெய்வபல மிருக்கவேண்டும். அது சிவபூசையினலும் தவத்தினலுமே யன்றி வேறொன்றல் வரமாட்டாது. ஆகலின் நீங்கள் உங்கள் எதிரிகளாகிய தேவர்களை வென்று அடக்க வேண்டுமாகில் இப்போதே சிவபூசையும் தவமும் செய்யுங்கள்" என்று சொல்லக்கேட்டு அம்மூவர்களும் மீட்டும் குருபதத்தில் வணங்கி, "சுவாமி! அப்படியானல் சிவபூசையும் தவமும் செய்யத்தக்க அதி உத்தம ஸ்தானத்தையும், அவைகள் செய்யும் விவரங்களையும் தேவரீர் இப்போதே அடியேங்களுக்கு உணர்த்தவேண்டும்; நாங்கள் உடனே ஆங்குச்சென்று

அப்படியே செய்து தெய்வபலத்தைப் பெற்று எங்கள் சத்துருக்களை வென்று அடக்குகிறோம்" என்று சொல்லி வேண்டிக் கொண்டார்கள். அதற்குச் சுக்கிர பகவான் ஆலோசித்து "மைந்தர்களே! பூமியிலே தமிழ்நாட்டிலே பிராகிருதிக்குத் தெற்கே அரிஹரசம்பந்த வியர்வை நதியாகிய கெடிலநதியின் வடகரையிலே, அதிகாபுரமென்னும் ஸ்தலமொன்றிருக்கிறது; அதுவே எல்லாத் தலங்களுக்கும் அதிகமான உத்தமஸ்தானம். நீங்கள் அத்தலத்தைச் சார்ந்து அதிலே சிவபூசையும் தவமும் செய்து சித்தியடையுங்கள். சிவபூசை மாத்திரம் என்றைக்கும் தவறலாகாது" என்று உறுதிசொல்லி அவர்களுக்குச் சிவதீக்ஷை செய்து, சிவபூசை எழுந்தருளப் பண்ணிக் கொடுத்து, தவஞ் செய்யு முறைமைகளையும் உபதேசித்தனுப்பினர்.

உடனே தாரகாக்ஷன் முதலிய மூவரும் எழுந்து அதிகாபுரிக்ஷேத்திரத்தை யடைந்து, கெடில நதியிலே ஸ்நானம் பண்ணி, விபூதி உருத்திராக்கங்களாகிய சிவசின்னங்களைத் தரித்துக்கொண்டு அத்தியந்த சிரத்தாபத்தியுடன் பஞ்சேந்திரியமடங்கி பஞ்சாக்கினி மத்தியில் ஸ்தம்பாகாரமாயிருந்து கொண்டு ஆயிரவருஷம் அகோர உக்கிரதவஞ் செய்தார்கள்; அந்த தவாக்கினி மூன்று லோகத்தையும் தகித்தது. இந்திரன் இதையறிந்து அந்த மூவர்கள் செய்யும் தவத்தையும் அழித்து வரும்படியாக மேனகை, ரம்பை, திலோத்தமை என்னும் மூன்று தெய்வப் பெண்களையும் அனுப்ப அவர்கள் அம்மூன்று அசுரர்களும் தவஞ் செய்யும் இடத்தைச் சார்ந்து தங்களாலானமட்டும் தவத்தையழிக்கும் உபாயங்களைச் செய்து பார்த்தும் முடியாமையால் திரும்பிப் போய்த் தேவராஜனிடத்தில் சொல்லிவிட்டு அகன்றார்கள்.

அப்பால் இந்திராதி தேவர்களெல்லாம் சத்தியலோகஞ் சென்று பிரமதேவரைக் கண்டு துதிசெய்து வணங்கிச் "சுவாமி! பூமியின் கண்ணே மூன்றசுரர்கள் முன்னாலே எங்களோடு போர் செய்து தோற்றுப் போனவர்கள் இப்போது அதி உக்கிரமாகப் பஞ்சாக்கினி மத்தியிலிருந்து தவஞ் செய்கிறார்கள். அந்தத் தவாக்கினி திரிலோகத்தையும் தகிக்கிறது. அந்தத் தவமுடிவில் சிவபிரான் எழுந்தருளி வந்தால் அவர்களுக்கு என்ன வரங்கொடுத்து விடுவாரோ அறியோம். அதற்கு முன்னரே தேவரீர் அவர்களிடத்தே போய் அவர்கள் கேட்டபடியே வரங்களைக் கொடுத்துவிடாமல் ஏதேனும் உபாய வரத்தைக்கொடுத்து வரவேண்டும். இப்போது தேவரீர் போகாமற்போனால் அப்பால் எப்படி முடியுமோ தெரியாது" என்று சொல்லி வேண்டிக்கொண்டார்கள்.

உடனே பிரமதேவர் அன்னவாகனத்தி லேறிக்கொண்டு பூலோகத்தில் வந்து உக்கிர தவஞ்செய்யும் மூன்றசுரர்களுக்கும் காட்சி கொடுத்து "ஓ சுக்கிர மாணாக்கர்களே! நீங்கள் செய்யும் தவத்தினால் மிகவும் மகிழ்ச்சியடைந்தோம். இனித் தவத்தை நிறுத்தி உங்களுக்கு வேண்டிய வரத்தைக் கேளுங்கள்" என்று சொல்லக்கேட்ட அருந்தவ அசுரர்கள் மூவரும் பிரமதேவரைத் தோத்திரம் பண்ணிப் பணிந்து எழுந்து நின்று "சுவாமி! எங்களுக்கு நாங்கள் என்றும் சாகாமலிருக்கும்படியான நித்தியத்துவம் தந்தருளவேண்டும்; அதனோடு நாங்கள் நினைத்த இடமெங்கும் செல்லும்படியாக ஆகாச மார்க்கத்தில் பறக்கத்தக்க மூன்று கோட்டைகளும், இந்திரன் முதலிய எந்தத் தேவர்களும் எங்களைக் கண்டால் நடுங்கும்படியான மகாபல, பராக்கிரமமும் தரவேண்டும்" என்று வணங்கினார்கள்.

அதற்குப் பிரமதேவர் "ஓ தானவ வீரத் தபோதனர்களே! நீங்கள் கேட்ட வரங்களில் முதலாவதாகிய நித்திய

வரம் ஒன்று நீங்கலாக மற்றதைக் கொடுத்தோம். அந்த நித்தியத்துவம் கொடுக்கவல்லவர் மிருத்துவைச் சபித்ததனால் மிருத்துஞ்சயன் என்று பெயர் பெற்றிருக்கின்ற சிவபெருமான் ஒருவரேயன்றி வேறு யாவருளர். அப்பேர்ப்பட்ட வரத்தைக் கொடுக்கும்படி என்னைக் கேட்டதும் தகுதியல்ல" என்று சொல்லிவிட்டுப் பிரமதேவர் மறைந்தருளினர்.

உடனே பிரமதேவர் கொடுத்தருளிய வரத்தின்படியே நூறு யோசனை விஸ்தீரணமுள்ளதாய் சகல வளப்பங்களும் நிறைந்ததாய், பொன்னினாலும், வெள்ளியினாலும், இரும்பினாலும் நிருமித்து விஸ்வப் பிரமாவினால் அனுப்பப்பட்ட மூன்று கோட்டைகளும் ஆகாச மார்க்கமாய் பறந்து வந்து அவர்கட்கு எதிரே நின்றன. அசுராதிபர் மூவரும் அவற்றைக்கண்டு அதியாச்சரியங் கொண்டு உள்ளே புகுந்து அங்குள்ள விசேடங்களை எல்லாம் பார்த்து, அதில் பிரஜைகள் மாத்திரம் இல்லாதிருக்கின்றமை கண்டு, பூர்வம் தேவர்கள் யுத்தத்திற் சிதறுண்டு பல இடங்களிலும் சென்றிருந்த தங்கள் சேனைகளையெல்லாம் வரவழைத்துக்கொண்டு அவர்களோடு நல்ல சுபமுகூர்த்தத்திலே கோட்டைகளில் கிரகப்பிரவேசஞ் செய்து, அக்கோட்டைகளுள் வாழ்பவர்களுக்கு எல்லாம் சுக்கிரபகவானால் சிவதீக்ஷையும் சிவபூசையும் செய்வித்து, எப்போதும் பூசையை விடாமல் பாதுகாத்து வரும்படி கட்டளையிட்டு, இந்திரன் முதலியோர் இறைஞ்சிப் போற்றவும், சங்கநிதி, பதுமநிதி, காமதேனு முதலியவைகள் ஏவல் கேட்கவும் தங்களுக்கு ஒருவரும் நிகரின்றி எல்லா உலகங்களையும் தாங்களே தங்கள் ஆக்கினைக்குள் அடக்கி நெடுங்காலம் ஆண்டு வந்தார்கள்.

துஷ்டர்களுக்குப் பேரதிகாரம் வந்தால் சும்மா இருப்பாரோ ? இம்மூவரும் என்ன பூசை தவம் செய்பவர்களாயிருந்த போதிலும் இயற்கையாயுள்ள தங்கள் அசுரகுல

விருத்தியினாலும், தங்கள் கோரிக்கையினாலும், தேவர்களை அடிமைப்படுத்திய நன்றியும், முனிவர்களையும் அவர்கள் செய்யத்தகாத குற்றேவல்கள் செய்யும்படி வருத்தி, கோட்டையோடு கிளம்பிப் பறந்து போய்ப் போய் உலகங்களை எல்லாம் அழிக்கத் தலைப்பட்டார்கள்.

இப்படியாக இந்த முப்புராதியர் செய்து வருங் கொடுமைகளைச் சகிக்கக் கூடாதவர்களாய் இந்திராதி தேவர்களும் முனிவர்களும், சித்தர் வித்தியாதரர் முதலியோரும் திரண்டு போய் வைகுண்ட நகரையடைந்து ஸ்ரீமகா விஷ்ணு மூர்த்தியைக்கண்டு வணங்கித் தோத்திரம் பண்ணி, முப்புராதிகளால் தாங்கள் படுகின்ற இம்சைகளை எல்லாம் சொல்லி முறையிட்டார்கள்.

அதனைக் கேட்ட ஸ்ரீமந் நாராயண மூர்த்தியானவர் ஆலோசித்து இந்திரனை நோக்கி "அந்தத் திரிபுர வாசிகளை யடக்குவது நம்மால் முடிவதல்ல. ஸ்ரீகைலாச பதியைக் கொண்டே அடக்குவிக்க வேண்டும். ஆனால் அவர்கள் அத்தியந்த பேர்களும் சிவபூஜா துரந்தரர்களாயிருக்கின்றமையால் சிவபிரான் அவர்களை நாசப்படுத்தச் சம்மதியார். ஆதலால் இப்போது நானே போய் என்னுடைய மாயையினால் முப்புராதிகளை எல்லாம் மயக்கி அவர்கள் அணிந்திருக்கும் விபூதி ருத்திராக்ஷ தாரணங்களாகிய சிவசின்னங்களையும் அவர்கள் செய்துவரும் சிவபூசைகளையும் மாற்றுவித்து அப்பால் சிவபெருமானைக் கொண்டே அவர்களை நாசப்படுத்துவிக்கிறேன்" என்று சொல்லி இந்திராதியர்களை எல்லாம் தத்தம் இடத்திற்கு அனுப்பிவிட்டு விஷ்ணு மூர்த்தி திரிபுரவாசிகளை வஞ்சிக்கும் சூழ்ச்சியை ஆலோசித்துக் கொண்டிருந்தார்.

ஏழாவது

திரிபுரதகனச் சருக்கம்

கபடநாடக சூத்திரியாகிய திருமால் திரிபுரவாசிகளாகிய அவுணர்களை எல்லாம் அவர்கள் மேற்கொண்டிருக்கிற சிவ சின்னங்களையும், சிவபூசையையும் விடுவித்துப் பிரஷ்டர்களாக்க வேண்டி தனது மாயா வல்லபத்தினால் தான் ஒரு பௌத்தமத குருவாகி, நாரத முனிவரை அதற்குத் தக்க மாணாக்கராகக் கூட அழைத்துக்கொண்டு திரிபுரங்களிற் பிரவேசித்து அப்புர வாசிகளுக்கு எல்லாம் சில அற்புத மகத்துவங்களைக் காட்டி வஞ்சித்து, தனது துற்போதனையினாலே திரிபுரவாசிகளை எல்லாம் பதிதர்களாக்கினார். ஆனால் தலைவர்களாகிய தாரகாக்ஷன், மகராக்ஷன், வித்துன்மாலி யென்னும் வைராக்கிய சிவபக்தர்கள் மூவரை மாத்திரம் அப்படியாக்குதற்கு இயலவில்லை. "மூவர்களைப் பேதிப்பது முடியாவிடினும் குற்றமில்லை; முப்புர வாசிகள் எல்லாம் சன்மார்க்க நெறிதவறித் துன்மார்க்கர்களானதே போதும்" என்று கருதி உடனே விஷ்ணுமூர்த்தி இந்திராதி தேவர்களையுங் கூட்டிக்கொண்டு போய், ஸ்ரீ கைலாயத்தை யடைந்து, அங்கே அபரசம்புவாய் முதற்காவலராக விளங்காநின்ற ஸ்ரீ நந்திதேவரைக் கண்டு துதிசெய்து வணங்கிச் சுவாமி! அடியோங்களெல்லாம் திரிபுராதிகள் செய்யுங்கொடுமைக் காற்றாது அடைக்கலமாக ஈங்கு வந்தடைந்தோம்; இந்தச் செய்தியை சிவபிரானுக்குத் தெரிவிக்க வேண்டும்" என்று சொல்லி வேண்டிக் கொண்டார்கள்.

எங்கள் பிரானாகிய ஸ்ரீ நந்திதேவர் விஷ்ணுவாதியர்களை நோக்கி, "அன்பர்களே! நீங்கள் அஞ்ச வேண்டாம்! திரிபுராதிகளுக்கு காலம் குறுகிவிட்டது. அதற்குத் தக்க

படியே இப்போது அவர்கள் சிவபூசையாதிகளையும் விட்டு, மகா கொடுமைகளைச் செய்து வருகிறார்கள். இவைகளை எல்லாம் சுவாமிக்குத் தெரிவித்து வருகிறேன். நீங்கள் இங்கே தானே யிருங்கள்" என்று அவர்களை எல்லாம் வாயிலின் புறத்தில் நிறுத்தி விட்டுப் போய் சிவபிரானைக் குறுகி வணங்கிநின்று, திரிபுராதிகள் செய்யும் கொடுமைகளையும் அவற்றைச் சகிக்க மாட்டாமல் விஷ்ணு முதலியோர் வந்து வாயிலிற் காத்திருப்பதையும் விண்ணப்பம் பண்ணினார்.

அதுகேட்டுச் சிவபெருமான் "நல்லது, நாம் திரிபுர சம்மாரம் செய்வதற்கு வில் முதலாகியவற்றை ஆயத்தஞ்செய்து வரும்படி தேவர்களுக்குக் கட்டளையிடுக" என்று சொன்ன மாத்திரத்தில் நந்திதேவர் சந்தோஷமாய்ப் பணிந்து விடை பெற்று வந்து விஷ்ணுவாதியர்களை நோக்கி, நீங்கள் போய் சீக்கிரத்தில் " சிவபெருமான் எழுந்தருளி வருவதற்குத்தக்க இரதமும், அவர் கைப்பற்றித் திரிபுராதிகள் மேல் பாணப் பிரயோகம் செய்வதற்குத்தக்க வில்லும் சேகரித்து வாருங்கள்" என்று பணித்த மாத்திரத்தில் விஷ்ணு முதலிய தேவர்களெல்லாம் மிகுந்த சந்தோஷமடைந்து ஸ்ரீ நந்திதேவரை வணங்கி விடைபெற்றுக் கொண்டுபோய் இரதம் அமைக்கும்படியாக ஆலோசித்தார்கள். எங்ஙனமென்னில், "* அகண்டாகார சொரூபியாகிய சிவபெருமானுக்கு நாம் † கண்டிதமாகிய ஓர் இரதம் சமைத்துக்கொடு போதல் கூடாதேயாயினும் அவர் அணுவுக்கு அணுவாகவும், மகத்துக்கு மகத்தாகவும், இருப்பவராதலானும், இப்போது கண்டிதங்களாகத் திரியும் திரிபுரங்களை யடக்கவேண்டித் தாமும் கண்டிதராகவே எழுந்தருளி வருங்கருத்தால் நம்மை

* அகண்டாகாரம் - வரையறுக்கப்படாத பூரண வடிவம்.

† கண்டிதம் - வரையறுக்கப்பட்ட சிறிது இடம்.

இரதங்கொண்டு வரச்சொல்லி யிருக்கின்றமையானும் ஒரு வாறு அமைத்துக் கொடுபோவோம்" என்று தீர்மானித்து, துவாத சாதித்தரும் சந்திரனும் சக்கரங்களாகவும், பூமியே அடிப்பீடமாகவும், சத்த மருத்துக்கள் படிகளாகவும், அஷ்ட குல வெற்பும் தூண்களாகவும், இமயவரை கொடிஞ்சியாக வும், அஸ்தகிரி உதயகிரி கூம்பாகவும், நான்கு வேதங்களும் குதிரைகளாகவும், ஆறங்கம் புராண சாஸ்திராதிகள் மணிக ளாகவும், பிரமா சாரதியாகவும், மகம்மேரு கிரி வில்லாகவும், ஆதிசேடன் அந்த வில்லுக்கு நாணியாகவும், சரஸ்வதி வில் விற்றூங்கும் மணியாகவும், விஷ்ணு அம்பாகவும் இப்படித் தேவாமிசங்களை எல்லாந் திரட்டி இரதமும் வில்லம்புமாக ஏற்படுத்திக்கொண்டு பிரம்ம விஷ்ணுக்களும் இந்திராதி தேவர்களும் கைலாசத்தையடைந்து திருநந்தி தேவரைத் தரிசித்துப் போற்றி வணங்கி "சுவாமி! தேவரீர் கட்டளைப் படியே சிவபிரானுக்கு இரதமும் வில்லும் கொண்டு வந் திருக்கின்றோம். இந்தச் செய்தியை ஸ்ரீ கைலாசபதிக்குத் தெரிவிக்க வேண்டும்" என்று பிரார்த்தித்தார்கள். ஸ்ரீ நந்தி தேவர் அப்படியே சுவாமிக்குத் தெரிவிக்க, சுவாமி "அவர் களை எல்லாம் இங்கே வர விடுக" என்று பணித்தருளினர். ஸ்ரீ நந்திபிரான் வந்தோர் யாவரையும் சிவபிரான் திருமுன்பு விடுக்க,விஷ்ணுவாதியர்கள் சிவபிரானைத் துதிசெய்துவணங்கி, "சுவாமி! எங்கள் இடர் தீர்த்தருள வேண்டும்" என்று பிரார்த்திக்க, சுவாமி திருவருள் கூர்ந்து எழுந்திருந்து பிரமதேவர் கைகளைப் பற்றிக்கொண்டு திருவாயிலைக் கடந்து பானுகம்பன் ஆயிர வாயாலும் சங்கத்தொனி பண்ணவும், வாணாசுரன் இரண்டாயிரங் கைகளாலும் குடமுழா முழக்க வும், தும்புருநாரதர் யாழ்மீட்டிக் கீதம் பாடவும் எழுந்தருளி வந்து மேருவில்லைத் திருக்கரத்தில் வாங்கிக்கொண்டு, தேவர் தெய்வதாமிசங்களாற் சமைத்துக்கொண்டுவந்த இரதத்தி

லேறினர். உமாதேவியாரும் இந்திராணி முதலிய தேவ மாதர்கள் வாழ்த்தெடுப்ப, லட்சுமி சரஸ்வதி இருவரும் இருமருங்கினும் வணங்கிக் கைலாகு கொடுத்துவர எழுந்தருளிவந்து சிவபிரான் பக்கத்தில் அமர்ந்தருளினர். அநேகமாயிரம் சிவகணங்களும் பூதப்படைகளும் முப்பத்து முக்கோடி தேவர்களும் புடைசூழ விநாயகக் கடவுளும், சுப்பிரமணியக் கடவுளும், வீரபத்திரக் கடவுளும், தேவேந்திரனும் தத்தம் வாகனங்களில் ஆரோகணித்துக்கொண்டுவந்து இருபுடையும் நெருங்கினர்கள். பிரமதேவர் இரதத்தை நடத்தினர். சர்வ வாத்தியங்களும் முழங்க, சகல விருதுகளுடனும் இப்படியாகச் சிவபிரான் எழுந்தருளிய இரதம் தென்திசை நோக்கிச் சென்று திருவதிகாபுரியை யடைந்தது. திரிபுரங்களும் ஒன்றோடொன்று நெருங்கித் திருவதிகையின் தென்பாரிசத்திலிருந்தன.

சர்வ சாமர்த்தியமுடைய சிவபெருமான் அந்த முப்புரங்களைக் கண்ணுற்று "இப்புர வாசிகளாகிய அடிமை யசுரர்களோ! நமக்கோர் எதிரிகள்; இவர்கள்மேல் நாம் படையெடுத்துப் போதல் தகுதியன்றே" என்று இரங்கி நின்றார். அப்போது தேவர்கள் "நாமெல்லாம் இப்படி உபபலமாக வராவிட்டால் சிவபெருமான் திரிபுராதிகளை எப்படி வெல்வார்" என்று தங்களுக்குள்ளே கொஞ்ச மமதை யடைந்தார்கள். அந்தக் குறிப்புச் சிவபிரான் உணர்ந்து புன்னகை செய்து, தேவர்கள் கொணர்ந்த அந்த இரதத்தில் தாம் சற்று அழுந்தி யுட்கார்ந்தார். உட்காரவே இரதம் அச்சு வேறு ஆணி வேறாகச் சிதைந்தது. இரதம் சிதைதலைக் கண்ட திருமால் உடனே தாம் ஒரு ரிஷபவாகனமாகி, சிவபிரானையும் உமாதேவியாரையும் தாங்கிக்கொண்டார். அது முதலாகவே

ரிஷபம் சிவபிரானுக்கு அதிசிரேஷ்டமான வாகனமாயிற்று. இதனை,

" கடகரியும் பரிமாவுந் தேரும் உகந்து ஏறுமே
இடபமுகந் தேறியவா றெனக்கரிய வியம்பேடி
தடமதில்கள் ஒருமூன்றுந் தழலெரித்த அந்நாளில்
இடபமதாய்த் தாங்கினான் திருமால்காண் சாழலோ "

எனவரும் திருவாசகத்திற் காண்க.

சிவபிரான் தேவர்கள் மமதை யடங்கும்படியாகச் செய்த புன்னகையுடனே, சிவபூசை தவறாத் திரிபுரத் தலைவர்கள் மூவரும் உயிர்தப்பி யுய்ந்திடற்கோர் தண்ணகையும், அப்பூசை தவறிய முப்புரவாசிகளெல்லாம் புரத்தோடு பஸ்மீகரிக்கும்படிக்கோர் வெந்நகையும் செய்தருளி வீர அஷ்டகாசம் பண்ணினார். அதனால் திருவதிகையில் சிவபிரானுக்கு அன்றுமுதல் வீரட்டேசுரரெனப் பெயராயிற்று.

முப்புரத் தலைவர்கள் மூவரும், அவர்கள் இருந்த இடமும் தவிர ஏனையோரிருந்த இடமெல்லாம் அந்த க்ஷணமே அவர்களோடு நீறுபட்டு வெந்தொழிந்தது.

சிவபெருமான் முப்புரத் தலைவர்கள் மூவருள் இருவரைத் துவார பாலகராகவும்,ஒருவரைக் குடமுழா முழக்குபவராகவும் தமது அருகிலிருக்கும்படி கட்டளையிட்டருளி, தேவர்களுக்கெல்லாம் விடை கொடுத்தனுப்பி விட்டுத் தாம் அந்தர்த்தானமாய் மறைந்தருளினார்.

மூவெயில் செற்றஞான் றுய்ந்த மூவரில்
இருவர் நின்றிருக் கோயிலின் வாய்தல்
காவ லாளரென் றேவிய பின்னை
யொருவநீ கரிகாட ரங்காக

மானே நோக்கியோர் மாநட மகிழ
மணிமு ழாமுழக் க்வருள் செய்த
தேவ தேவநின் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழிற்றிருப் புன்கூ ருளானே.

—சுந்தரமூர்த்தி சுவாமிகள்

மூவரும் அன்று வேவாதிருந்த இடத்துக்கு வேவாக்கொல்லை என்றும், திரிபுரத்தவரைப் பேதித்த திருமால் தங்கிய இடத்துக்கு வேங்கடன் பேட்டை யென்றும், பாணமாகவந்த அவர் தங்கிய இடத்துக்கு சர நாராயணப் பெருமாள் கோயில் என்றும் இப்போதும் பெயர் வழங்கி வருகின்றது.

சிவபிரான் காளியோடு நிர்த்தனம் பண்ணி ஒரு நகை செய்த இடம் சிதம்பரம். புன்னகை தண்ணகை வெந்நகை யாகிய மூன்று நகை செய்த இடம் திருவதிகை. ஆதலால் இது அதனினும் சிறந்த ஸ்தானமென்பது யாவர்க்கும் தானே விளங்கும்.

எட்டாவது

கருடலிங்கச் சருக்கம்

காசிப முனிவருடைய மனைவியருள், வினதை கத்துரு என்னும் இருவரும் ஒருநாள் கடலாடச் சென்றவிடத்தில் கத்துரு வினதையை நோக்கி "வினதாய்! நீ விண்ணுலகஞ் சென்று வந்தையே! தேவேந்திரனுடைய உச்சைச் சிரவம் என்னும் குதிரை சுத்த வெள்ளையோ? கருநிறங் கலந்ததோ? சொல்" என்று கேட்க, வினதை சுத்த வெள்ளையென்று வாஸ்தவத்தைச் சொன்னாள். கத்துரு அதனை மறுத்து "கருநிறங் கலந்தது" என்றாள். இப்படியாக ஒருவரோ

டொருவர் வாதுகூறி, தோற்றவள் வென்றவருக்கு அடிமை யாகிறதென்றும், அவ் வடிமை தேவலோகத்திலிருந்து அமிர்தங் கொணர்ந்து கொடுத்தால் நிவர்த்தியென் றும், தங்களுக்குள்ளே சபதங் கூறிக்கொண்டு, கத்துரு வானவள் வினதையை வஞ்சிக்கும் பொருட்டுத் தன்புத்திர னாகிய கார்க்கோடகனுடைய விஷத்தினால் அக்குதிரையின் ஒரு புறத்துக் கருமையுண்டாக்கி, அதனை வினதைக்குக் காட்டி வினதையை அடிமை கொண்டாள். பின்பு வினதை யானவள் தன் புத்திரனாகிய கருடனால் விண்ணுலகத்தினின் றும் அமிர்தகலசங் கொணர்ந்து கொடுக்கப்பெற்று, அதனைக் கத்துருவுக்குக் கொடுத்து தன் அடிமை நீங்கினாள்" என் பது பாரதத்துள் பிரசித்தியல்லவா? பறவை வேந்தனாகிய கருடனுக்குத் தான் தனியே சென்று தேவரை யெல்லாம் வென்று அமிர்த கலசங் கொணரும்படியான வல்லபம் எவ்வாறுண்டாயிற்றெனின்? அவன் அதிகாபுரி க்ஷேத்தி ரத்தை யடைந்து சிவபூசையும் தவமும் செய்யப்பெற்றத னால் உண்டாயிற்றென்றறிக. எங்ஙனமெனில்? கருடனான வன் தன் தாய் மாற்றானுக்கு அடிமையானதை யுணர்ந்து, அவளை எவ்விதத்திலேனும் மீட்க வேண்டுமென்னும் வைராக்கியமுடையவனாய் பிதாவாகிய காசிப முனிவரை யடைந்து அவருக்கு நிகழ்ந்த காரியங்களை யெல்லாம் எடுத் துரைத்து, இனி நான் ஈன்றாள் அடிமை கண்டிருக்கப் பெறேன். இப்போதே தேவாமிர்தங் கொணர்ந்து கொடுத்து விட்டுத் தாயின் அடிமையைத் தவிர்க்கவேண்டும்; ஆதலால் எந்தத் தேவரும் என்னைக் கண்டால் நடுநடுங்கும்படியான அதிபல பராக்கிரமத்தை அடியேன் அடையும்படிக்கு அநுக்கிரகிக்க வேண்டும்" என்று பணிந்தான்.

இப்படி அதி தீவிரமுடையனாய்ப் பணிந்த கருடனை காசிபர் எடுத்தணைத்து "அப்பா கலுழா! அவசரப்படாதே,

காலமும் இடமும் அறிந்து முயன்றால் எதுதான் கைகூடாது? அதி உற்சாகத்தோடு நீ நம்மை வந்தடைந்த இக்காலமே நல்ல காலம். இடமோ! தென்றிசையில் பிநாகி நதிக்குத் தெற்கே கெடிலநதியின் வடகரையில் உள்ள அதிகாபுரியே சிறந்த இடம். நீ அங்கே சென்று சிவார்ச்சனையும் தவமும் செய்குவையாயின் எண்ணிய எண்ணிய யாங்கு அடைகுவை" என்று புத்திரனாகிய கருடனுக்குக் காசிப முனிவர் உணர்த்த வேண்டிய உண்மைகளை யெல்லாம் உணர்த்தி யனுப்பினார். கருடன் பிதாவைப் பணிந்து விடைகொண்டு உடனே திருவதிகையைச் சார்ந்து சக்கர தீர்த்தத்திலே ஸ்நானம் பண்ணி, அதற்கு வடபாரிசத்திலே மேற்கு நோக்கிய சந்நிதியாக ஓர் ஆலயமெடுப்பித்து, அதில் தன் பெயரால் ஒரு சிவலிங்கப் பிரதிஷ்டை செய்வித்துப் பூசித்து அங்கேயே அரிய தவமும் செய்தான்.

தவமுடிவிலே வீரட்டானேசுரர் பிரசன்னராய் எழுந்தருளி வந்து "அப்பா பறவை வேந்தே! நீ யாது காரணமாகத் தவஞ் செய்கின்றாய்? உனக்கு வேண்டிய வரம் யாது? கேள்" என்று திருவாய்மலர்ந்தருளக் கருடன் சுவாமியைத் துதிசெய்து வணங்கி எழுந்து நின்று "சுவாமி! அடியேன் தேவலோகத்திற்சென்று அமிர்தங் கொணர்ந்து கொடுத்து என் தாயின் அடிமையைத் தீர்க்கும்படிக்கு எனக்கு அதிபல பராக்கிரமத்தை அநுக்கிரகிக்க வேண்டும்" என்று கேட்டுக் கொள்ள, சுவாமி அப்படியே அநுக்கிரகித்து மறைந்தருளினார். இதுவே கருடன் வலிமை பெற்றதற்குக் காரணம்.

கருடனாற் பூசிக்கப்பட்ட கருடலிங்கத்தைத் தரிசிக்கப் பெற்றோர் சர்ப்பாதிகளால் வரும் விடதோஷங்களெல்லாம் நீங்கி இகபர இன்பமடைகுவர்.

ஒன்பதாவது

பாண்டவலிங்கச் சருக்கம்

பாரதயுத்தத்திலே கிருஷ்ணமூர்த்தியானவர் துரோணு சாரியாரை ஆயுதம் எடுக்காதிருக்கச் செய்யவேண்டுமென் னுங் கருத்தால் வீமனைக் கூப்பிட்டு, "நீ போய் துரோண ருக்கு எதிரில் உமது புத்திரனுகிய அசுவத்தாமா இறந் தான்" என்று சொல்லிவா என்று அனுப்ப வீமன் அப் படியே போய்ச் சொன்னுன். துரோணுச்சாரியார் அவன் வார்த்தையை நம்பாமல் சத்திய விரதனுகிய தருமபுத்திரனை நோக்கி, "வீமன் சொன்ன வார்த்தை சரிதானு" என்று கேட்டார். கிருஷ்ணனுடைய போதனைக்குட்பட்ட தரும புத்திரன் சற்று கலங்கி, அப்போது அசுவத்தாமா என்னும் பட்டத்து யானை இறந்து போயிருந்ததை யுணர்ந்து, மாறு பாடாக "அசுவத்தாமா' ஹதாகுஞ்சரம்" என்றுன். அதில் குஞ்சரம் என்னும் சொல் துரோணர் செவியில் கேட்காதிருக் கும்படிக்கு உடனே கிருஷ்ணன் சங்கத்தொனி பண்ணின மையால் துரோணர் வேறொன்றுங் கருதாமல் "தன் புத்தி ரன் இறந்தது உண்மைதான்" என்று நிச்சயித்து துன்ப சாகரத்தில் மூழ்கி, இனி நமக்குச் சண்டையென்ன என்று ஆயுதங்களை எறிந்துவிட்டு, தவநிஷ்டை கூடியிருந்தார். அச் சமயத்திலே அதற்குமுன் அவர் கைவாளால் எறியுண்டு ஓடிப் போயிருந்த துருஷ்டத்துய்மன் என்பவன் ஓடிவந்து அவரை அநியாயமாய்க் கொன்றுபோட்டான். அதனுல் குருஹத்தி யும் மாறுபாடாகப் பொய் சொன்ன தோஷமும் தருமபுத்திர னைச் சார்ந்தது.

பாரத யுத்தமெல்லாம் முடிந்து பாண்டவர் அஸ்தினு புரியை யடைந்து தருமனுக்குப் பட்டாபிஷேகம் செய்ய யத்தனிக்கையில் "ஓ தருமபுத்திரனே! குருஹத்தி தோஷ

மும் பொய்சொன்ன தோஷமும் உன்னைக் குறுகியிருக்க அவைகளை நிவர்த்தித்துக் கொள்ளாமல் இப்போது பட்டாபிஷேகம் செய்துகொள்ளுதல் முறைமையன்று" என்று ஓர் அசரீரி வாக்கு யாவரும் கேட்கும்படிக்கு எழுந்தது. அதனைக் கேட்டோர் யாவரும் பிரமித்து நின்றார்கள். தருமபுத்திரன் திடுக்கிட்டுக் கலங்கி, "இதற்கு என்ன செய்யப் போகிறேன்" என்று நடுநடுங்கி ஒன்றுந் தோன்றாமல் திகைத்து நின்றான்.

தருமன் இப்படித் திகைத்து நிற்கையில் வேதவியாசர் அவ்விடம் வந்தார். வியாசர் வருதலைக் கண்ட தருமபுத்திரன் திகைப்பு நீங்கி மனமகிழ்வோடு எதிர்கொண்டு அவருக்குச் செய்யவேண்டிய உபசாரங்களை எல்லாம் செய்து, ஆகாசவாணியுரைத்த வாக்கியத்தையும் அவருக்கு எடுத்துரைத்து, "சுவாமி! இதற்கு யான் என்னசெய்வேன்" என்று வருந்தி நின்றான்.

வியாசர், "தருமபுத்திரா! நீ அஞ்சவேண்டாம். பிரமதேவர் முன்பு சிவசந்நிதியிற் பொய்யுரைத்து, அதனால் வந்த பெருங் குற்றத்தையுந் தீர்த்துக்கொண்ட அதிகாபுரி க்ஷேத்திரமென்று ஓர் திவ்விய ஸ்தலமிருக்கிறது. அது தென் திசையில் தமிழ் நாட்டிலே பெண்ணை நதிக்குத் தெற்கே கெடில நதியின் வடகரையிலுள்ளது.

நீ அந்தத் தலத்தை யடைந்து கெடிலநதியிலும் சக்கர தீர்த்தத்திலும் விதிப்படி ஸ்நானம் பண்ணி, அந்தச் சக்கர தீர்த்தக்கரையில் சிவலிங்கப் பிரதிஷ்டையுஞ் செய்வித்துப் பூசித்து உத்தம பிராமணர்களுக்கு சோடசதானங்களும் வழங்கு. இப்படியாகச் சிலநாள் நடத்தி வருவையாகில் இப்போது அசரீரி சொல்லிய இருவகைத் தோஷங்கள் மாத்திரமல்ல. இன்னும் எவ்வகைத் தோஷங்களிருந்த போதிலும் அவையெல்லாம் நீங்கிப்போம்" என்று சொன்னார்.

தருமபுத்திரன் வியாசர் கூறிய வார்த்தையை உறுதியாகப் பிடித்துக் கொண்டு உடனே தவுமிய முனிவரோடும், தம்பி மாரோடும் வேண்டிய திரவியங்களையும் எடுப்பித்துக்கொண்டு சதுரங்க சேனைகளும் சூழப் புறப்பட்டுச்சென்று திருஅதி கையை யடைந்து தவுமிய முனிவர் சங்கல்ப முதலிய கிரியை களைச் செய்விக்க, நதியிலும் தீர்த்தத்திலும் ஸ்நானம் பண்ணி, சிவகெரிசனுதிகளும் முறைமையிற் செய்து கொண்டு, சக்கர தீர்த்தக் கரையில் சிவலிங்க ஸ்தாபனமும் செய்வித்து, சிவபூசையும், சோடசதானங்களும் செய்து வந்தான்.

தம்பிமார்களும் தங்கள் தங்கள் பெயரால் சிவலிங்க ஸ்தாபனம் செய்து பூசித்து வந்தார்கள். தருமபுத்திரன் மாத்திரம் போஜனுதிகளை நீக்கி, ஜலபான மாத்திரஞ் செய்து கொண்டு அரிய விரதம் அநுட்டித்து வந்தான்.

இப்படியாக ஒரு மாதகாலம் நடந்தேறி வருகையில் ஒருநாள், “ஓ தருமபுத்திரனே! உன்னையடைந்த குருஹத்தி தோஷமும், பொய்மொழி கூறிய தோஷமும் நீங்கிப் போயிற்று. இனி நீ உன் நகரையடைந்து பட்டாபிஷேகஞ் செய்து கொண்டு உலகாளக் கடவை” என்று ஓர் அசரீரி வாக்கு உண்டாயிற்று.

அது கேட்டு யாவருங் களிகூர்ந்து சிவபிரானை வணங்கி விடைபெற்றுக்கொண்டு, அஸ்தினபுரியை யடைந்து தரும புத்திரனுக்கு முடிசூட்டி அவன் அரசாட்சி செய்யத் தாங்க ளெல்லாம் களிகூர்ந்து வாழ்ந்திருந்தார்கள்.

இந்தப் பாண்டு புத்திரர்கள் பூசித்த சிவலிங்கங்களை வழிபட்டோர் பகைவரை வென்று இஷ்ட காமியங்களை யடைவார்கள்.

அப்படியே கலிசித்தென்னும் சோழன் பாண்டவ லிங் கத்தைப் பணிந்து ஏத்திப் புத்திரப் பேறடைந்தனன்.

பத்தாவது

தீர்த்தச் சருக்கம்

மும்மூர்த்தியும் தாமேயாய், முத்தொழிலும் நடாத்தும் சிவபெருமான் முப்புர தகனஞ் செய்தருளிய திருவதிகையில் சிறந்துள்ள தீர்த்தங்களும் மூன்றும். அவையாவன ?

1-வது திருக்கெடிலம். இது ஆலயத்திற்குத் தெற்கே உள்ளது. இதன் விசேடங்கள் எல்லாம் கெடில மகிமைச் சருக்கத்தில் கூறப்பட்டது.

2-வது சக்கர தீர்த்தம். இது வீரட்டானேசுரர் சந்நிதிக் கெதிரே சற்று அக்கினி மூலையிலுள்ளது. இதில் திரிபுராந்தக மூர்த்திக்குச் சீதோபசாரம் செய்வித்தற்பொருட்டுச் சந்திரன் தனது அமிர்தத்தை நிரப்பினமையால் இது சந்திர தீர்த்த மென்றும், அமிர்த தீர்த்த மென்றும் சொல்லப்படும். அன்றியும் பிரமனும் கருடனும் இதில் ஸ்நானம் பண்ணி, தங்கள் பெயர் இதற்கு இருக்க வேண்டுமென்று சிவபிரானைக் கேட்டுக் கொண்டமையால் இதற்கே பிரம தீர்த்த மென்றும், கருட தீர்த்தமென்றும் பெயராயிற்று. இதில் சிவபெருமான் வைசாக பூரணையில் தீர்த்தங் கொடுக்கும் போது ஸ்நானம் செய்தோர் இம்மை, மறுமை, வீடு ஆகிய மூவகை யின்பங்களையும் பெறுவர்.

3-வது சூலகங்கை. இது வீரட்டானேசுரருக்கு ஈசான பாகத்திலுள்ள கூபம். இது திரிபுராந்தகராகிய சிவபெருமான் தமது திருக்கைச் சூலத்தினால் பூமியைக் கீண்டி உண்டாக்கி அதிலிருந்து அறுநூற்றறுபத்தாறு கோடி

தீர்த்தங்களேயும் வரவழைத்து கங்கைக்குக்காட்டி, கங்கையை யும் அவற்ருேடு அதில் கலந்து அடங்சி அமர்ந்திருக்கச் செய்தது. இதன் ஜலத்தை வாங்கிச் சிறிது உட்கொண்டு சிரசி லும் புரோக்ஷித்துக் கொண்டால் எல்லாத் தீர்த்தங்களிலும் ஸ்நானம் பண்ணிய பெரும் புண்ணியத்தைத் தரும்.

திருவதிகை மான்மியம் முற்றுப் பெற்றது

ஸ்ரீ நந்திதேவர் திருவடி வாழ்க

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருவதிகைத் தேவாரப் பதிகங்கள்

திருநாவுக்கரசு சுவாமிகள்

பண் - கொல்லி

திருச்சிற்றம்பலம்

கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேயிர வும்பகலும்
பிரியாது வணங்குவ னெப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றி னகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடி யேனதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே. க

நெஞ்சம்உமக் கேயிட மாகவைத்தேன்
நினையாதொரு போதும் இருந்தறியேன்
வஞ்சம்இது வொப்பது கண்டறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
நஞ்சாகி வந்தென்னை நலிவதனை
நணுகாமற் றுரந்து கரந்துமிடீர்
அஞ்சேலு மென்னீ ரதிகைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே. உ

பணிந்தாரன பாவங்கள் பாற்றவல்லீர்
படுவெண்டலை யிற்பலி கொண்டுழல்வீர்
துணிந்தேயுமக் காட்செய்து வாழலுற்றால்
சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்

பிணிந்தார்பொடி கொண்டுமெய் பூசவல்லீர்
பெற்றமேற்றுகந் தீர்சுற்றும் வெண்டலைகொண்
டணிந்தீரடி கேளதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே. ௩

முன்னம்அடி யேனறி யாமையினுன்
முனிந்தென்னை நலிந்து முடக்கியிடப்
பின்னையடி யேனுமக் காளும்பட்டேன்
சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்
தன்னையடைந் தார்வினை தீர்ப்பதன்றோ
தலையாயவர் தங்கட னாவதுதான்
அன்னநடை யாரதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே. ௪

காத்தாள்பவர் காவ லிகழ்ந்தமையாற்
கரைநின்றவர் கண்டுகொ ளென்றுசொல்லி
நீத்தாய கயம்புக நூக்கியிட
நிலைக்கொள்ளும் வழித்துறை யொன்றறியேன்
வார்த்தையிது வொப்பது கேட்டறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
ஆர்த்தார்புன லாரதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே. ௫

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலு முன்னை மறந்தறியேன்
உன்னாமம் என்னாவில் மறந்தறியேன்
உலந்தார்தலை யிற்பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய்
அலந்தேனடி யேனதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே ௬

உயர்ந்தேன்மனை வாழ்க்கையு மொண்பொருளும்
ஒருவர்தலை காவ லிலாமையினால்
வயந்தேயுமக் காட்செய்து வாழலுற்றால்
வலிக்கின்றது சூலை தவிர்த்தருளீர்

பயந்தேயென் வயிற்றி னகம்படியே
பறித்துப்புரட் டியறுத் தீர்த்திடநான்
அயர்ந்தேனடி யேனதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே. ௭

வலித்தேன்மனை வாழ்க்கை மகிழ்ந்தடியேன்
வஞ்சம்மன மொன்று மிலாமையினால்
சலித்தாலொரு வர்துணை யாருமில்லைச்
சங்கவெண்குழைக் காதுடை யெம்பெருமான்
கலித்தேயென் வயிற்றி னகம்படியே
கலக்கிமலக் கிட்டுக் கவர்ந்துதின்ன
அலுத்தேனடி யேனதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே. ௮

பொன்போல மிளிர்வதோர் மேனியினீர்
புரிபுன்சடை யீர்மெலி யும்பிறையீர்
துன்பேகவ லைபிணி யென்றிவற்றை
நணுகாமற் றுரந்து கரந்துமிடீர்
என்போலிக ளும்மை யினித்தெளியார்
அடியார்படு வதிது வேயாகில்
அன்பேயமை யும்மதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே. ௯

போர்த்தாயங்கொ ரானையின் ஈருரிதோல்
புறங்காடரங் காநட மாடவல்லாய்
ஆர்த்தானரக் கன்றனை மால்வரைக்கீழ்
அடர்த்திட்டருள் செய்த வதுகருதாய்
வேர்த்தும்புரண் டும்விழுந் தும்எழுந்தால்
என்வேதனை யான விலக்கியிடாய்
ஆர்த்தார்புனல் சூழதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே. ௧௦

திருச்சிற்றம்பலம்

இப்பதிகம் சூலைநோய் தீர ஓதி யருளியது.

பண் - காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

சுண்ணவெண் சந்தனச் சாந்துஞ் சுடர்த்திங்கட் சூளா மணியும்
வண்ண உரிவை யுடையும் வளரும் பவள நிறமும்
அண்ண லரண்முர ணேறும் அகலம் வளாய அரவும்
திண்ணன் கெடிலப் புனலும் உடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை அஞ்ச வருவது மில்லை. க

பூண்டதொர் கேழல் எயிறும் பொன்றிக ழாமை புரள
நீண்டதிண் டோள்வலஞ் சூழ்ந்து நிலாக்கதிர்போலவெண் ணூலும்
காண்டகு புள்ளின் சிறகுங் கலந்த கட்டங்கக் கொடியும்
ஈண்டு கெடிலப் புனலும் உடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை அஞ்ச வருவது மில்லை. உ

ஒத்த வடத்திள நாக முருத்திர பட்ட மிரண்டும்
முத்து வடக்கண் டிகையும் முளைத்தெழு மூவிலை வேலும்
சித்த வடமும் அதிகைச் சேணுயர் வீரட்டஞ் சூழ்ந்து
தத்துங் கெடிலப் புனலும் உடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை அஞ்ச வருவது மில்லை. ங

மடமான் மறிபொற் கலையும் மழுப்பாம் பொருகையில் வீணை
குடமால் வரையதிண் டோளுங் குனிசிலைக் கூத்தின் பயில்வும்
இடமால் தழுவிய பாகம் இருநில னேற்ற சுவடும்
தடமார் கெடிலப் புனலும் உடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை அஞ்ச வருவது மில்லை. ச

பலபல காமத்த ராகிப் பதைத்தெழு வார்மனத் துள்ளே
கலமலக் கிட்டுத் திரியுங் கணபதி யென்னுங் களிறும்
வலமேந் திரண்டு சுடரும் வான்கயி லாய மலையும்
கலமார் கெடிலப் புனலும் உடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை அஞ்ச வருவது மில்லை. ரு

கரந்தன கொள்ளி விளக்குங் கறங்கு துடியின் முழக்கும்
பரந்த பதினெண் கணமும் பயின்றறி யாதன பாட்டும்
அரங்கிடை நூலறி வாளர் அறியப் படாததொர் கூத்தும்
நிரந்த கெடிலப் புனலும் உடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை அஞ்ச வருவது மில்லை. ௬

கொலைவரி வேங்கை யதளுங் குலவோ டிலங்குபொற் றோடும்
விலைபெறு சங்கக் குழையும் விலையில் கபாலக் கலனும்
மலைமகள் கைக்கொண்ட மார்பும் மணியார்ந் திலங்கு மிடறும்
உலவு கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை அஞ்ச வருவது மில்லை. ௭

ஆடல் புரிந்த நிலையும் அரையில் அசைத்த அரவும்
பாடல் பயின்றபல் பூதம் பல்லா யிரங்கொள் கருவி
நாடற் கரியதொர் கூத்தும் நன்குயர் வீரட்டஞ் சூழ்ந்து
ஓடுங் கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை அஞ்ச வருவது மில்லை. ௮

சூழு மரவத் துகிலுந் துகில்கிழி கோவணக் கீளும்
யாழின் மொழியவ ளஞ்ச அஞ்சா தருவரை போன்ற
வேழம் உரித்த நிலையும் விரிபொழில் வீரட்டஞ் சூழ்ந்து
தாழுங் கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை அஞ்ச வருவது மில்லை. ௯

நரம்பெழு கைகள் பிடித்து நங்கை நடுங்க மலையை
உரங்களெல் லாங்கொண் டெடுத்தான் ஒன்பதும் ஒன்றும் அலற
வரங்கள் கொடுத்தருள் செய்வான் வளர்பொழில் வீரட்டஞ் சூழ்ந்து
நிரம்பு கெடிலப் புனலும் உடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை அஞ்ச வருவது மில்லை. ௧௦

திருச்சிற்றம்பலம்

இப்பதிகம் சமணர்கள் ஏவிய யானை அஞ்சும்படி ஓதியருளியது.

பண் - காந்தார பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

மூளைக்கதி ரிளம்பிறை மூழ்க வெள்ளநீர்
விளைத்தெழு சடையினர் மழலை வீணையர்
திளைத்ததோர் மான்மழுக் கையர் செய்யபொன்
கிளைத்துழித் தோன்றிடுங் கெடில வாணரே. க

ஏறின ரேறினை யேழை தன்னொரு
கூறினர் கூறினர் வேதம் அங்கமும்
ஆறின ராறிடு சடையர் பக்கமும்
கீறின வுடையினர் கெடில வாணரே. உ

விடந்திகழ் கெழுதரு மிடற்றர் வெள்ளநீ
ருடம்பழ கெழுதுவர் முழுதும் வெண்ணிலாப்
படர்ந்தழ கெழுதரு சடையிற் பாய்புனல்
கிடந்தழ கெழுதிய கெடில வாணரே. ந

விழுமணி யயிலெயிற் றம்பு வெய்யதோர்
கொழுமணி நெடுவரை கொளுவிக் கோட்டினார்
செழுமணி மிடற்றினர் செய்யர் வெய்யதோர்
கெழுமணி யரவினர் கெடில வாணரே. ச

குழுவினர் தொழுதெழும் அடியர் மேல்வினை
தழுவின கழுவுவர் பவள மேனியர்
மழுவினர் மான்மறிக் கையர் மங்கையைக்
கெழுவின யோகினர் கெடில வாணரே. ரு

அங்கையில் அனலெரி யேந்தி யாறெனும்
மங்கையைச் சடையிடை மணப்பர் மால்வரை
நங்கையைப் பாகமு நயப்பர் தென்றிசைக்
கெங்கைய தெனப்படுங் கெடில வாணரே. சு

கழிந்தவர் தலைகல னேந்திக் காடுறைந்
திழிந்தவ ரொருவரென் றெள்க வாழ்பவர்

வழிந்திழி மதுகர மிழற்ற மந்திகள்
கிழிந்ததேன் நுகர்தருங் கெடில வாணரே. எ

கிடந்தபாம் பருகுகண் டரிவை பேதுறக்
கிடந்தபாம் பவளையோர் மயிலென் றையுறக்
கிடந்தநீர்ச் சடைமிசைப் பிறையும் ஏங்கவே
கிடந்துதான் நகுதலைக் கெடில வாணரே. அ

வெறியுறு விரிசடை புரள வீசியோர்
பொறியுறு புலியுரி யரைய தாகவும்
நெறியுறு குழலுமை பாக மாகவும்
கிறிபட உழிதர்வர் கெடில வாணரே. கூ

பூண்டதேர் அரக்கனைப் பொருவின் மால்வரைத்
தூண்டுதோ ளவைபட அடர்த்த தாளினர்
ஈண்டுநீர்க் கமலவாய் மேதி பாய்தரக்
கீண்டுதேன் சொரிதருங் கெடில வாணரே. க0

திருச்சிற்றம்பலம்

கோப்பளித்த திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

இரும்புகொப் பளித்த யானை யீருரி போர்த்த ஈசன்
கரும்புகொப் பளித்த இன்சொற் காரிகை பாக மாகச்
சுரும்புகொப் பளித்த கங்கைத் துவலைநீர் சடையி லேற்ற
அரும்புகொப் பளித்த சென்னி அதிகைவீ ரட்ட னாரே. க

கொம்புகொப் பளித்த திங்கட் கோணல்வெண் பிறையுஞ் சூடி
வம்புகொப் பளித்த கொன்றை வளர்சடை மேலும் வைத்துச்
செம்புகொப் பளித்த மூன்று மதிலுடன் சுருங்க வாங்கி
அம்புகொப் பளிக்க எய்தா ரதிகைவீ ரட்ட னாரே. உ

விடையுங்கொப் பளித்த பாதம் விண்ணவர் பரவி யேத்தச்
சடையுங்கொப் பளித்த திங்கட் சாந்தம்வெண் ணீறு பூசி

உடையுங்கொப் பளித்த நாக முள்குவா ருள்ளத் தென்றும்
அடையுங்கொப் பளித்த சீரா ரதிகைவீ ரட்ட னாரே. ௩

கறையுங்கொப் பளித்த கண்டர் காமவே ளுருவம் மங்க
இறையுங்கொப் பளித்த கண்ணா ரேத்துவா ரிடர்கள் தீர்ப்பார்
மறையுங்கொப் பளித்த நாவர் வண்டுண்டு பாடுங் கொன்றை
அறையுங்கொப் பளித்த சென்னி அதிகைவீ ரட்ட னாரே. ௪

நீறுகொப் பளித்த மார்பர் நிழல்திகழ் மழுவொன் றேந்திக்
கூறுகொப் பளித்த கோதைக் கோல்வளை மாதோர் பாகம்
ஏறுகொப் பளித்த பாதம் இமையவர் பரவி யேத்த
ஆறுகொப் பளித்த சென்னி அதிகைவீ ரட்ட னாரே. ௫

வணங்குகொப் பளித்த பாதம் வானவர் பரவி யேத்தப்
பிணங்குகொப் பளித்த சென்னிச் சடையுடைப் பெருமை யண்ணல்
சுணங்குகொப் பளித்த கொங்கைச் சுரிகுழல் பாக மாக
அணங்குகொப் பளித்த மேனி அதிகைவீ ரட்ட னாரே. ௬

சூலங்கொப் பளித்த கையர் சுடர்விடு மழுவாள் வீசி
நூலுங்கொப் பளித்த மார்பில் நுண்பொறி அரவஞ் சேர்த்தி
மாலுங்கொப் பளித்த பாகர் வண்டுபண் பாடுங் கொன்றை
ஆலங்கொப் பளித்த கண்டத் ததிகைவீ ரட்ட னாரே. ௭

நாகங்கொப் பளித்த கையர் நான்மறை யாய பாடி
மேகங்கொப் பளித்த திங்கள் விரிசடை மேலும் வைத்துப்
பாகங்கொப் பளித்த மாதர் பண்ணுடன் பாடி யாட
ஆகங்கொப் பளித்த தோளா ரதிகைவீ ரட்ட னாரே. ௮

பரவுகொப் பளித்த பாடல் பண்ணுடன் பத்தர் ஏத்த
விரவுகொப் பளித்த கங்கை விரிசடை மேவ வைத்து
இரவுகொப் பளித்த கண்ட ரேத்துவா ரிடர்கள் தீர்ப்பார்
அரவுகொப் பளித்த கைய ரதிகைவீ ரட்ட னாரே. ௯

தொண்டைகொப் பளித்த செவ்வாய்த் துடியிடைப் பரவை யல்குற்
கொண்டைகொப் பளித்த கோதைக் கோல்வளை பாக மாக
வண்டுகொப் பளித்த தீந்தேன் வரிக்கயல் பருகி மாந்தக்
கெண்டைகொப் பளித்த தெண்ணீர்க் கெடிலவீ ரட்ட னாரே. ௧௰

திருச்சிற்றம்பலம்

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

வெண்ணிலா மதியந் தன்னை விரிசடை மேவ வைத்து
உண்ணிலாப் புகுந்து நின்றங் குணர்வினுக் குணரக் கூறி
விண்ணிலார் மீயச் சூரார் வேண்டுவார் வேண்டு வார்க்கே
அண்ணியார் பெரிதுஞ் சேயா ரதிகைவீ ரட்ட னாரே. க

பாடினார் மறைகள் நான்கும் பாயிருள் புகுந்தென் னுள்ளம்
கூடினார் கூட லால வாயிலார் நல்ல கொன்றை
சூடினார் சூடல் மேவிச் சூழ்சுடர் சுடலை வெண்ணீ
றாடினா ராடல் மேவி அதிகைவீ ரட்ட னாரே. உ

ஊனையே கழிக்க வேண்டில் உணர்மின்க ளுள்ளத் துள்ளே
தேனைய மலர்கள் கொண்டு சிந்தையுட் சிந்திக் கின்ற
ஏனைய பலவு மாகி யிமையவ ரேத்த நின்று
ஆனையின் உரிவை போர்த்தா ரதிகைவீ ரட்ட னாரே. ங

அருத்தியாங் குரம்பை தன்னிற் றொண்ணூற்றங் கறுவர் நின்று
விருத்திதான் தருக வென்று வேதனை பலவுஞ் செய்ய
வருத்தியால் வல்ல வாறு வந்துவந் தடைய நின்ற
அருத்தியார்க் கன்பர் போலும் அதிகைவீ ரட்ட னாரே. ச

பத்தியா லேத்தி நின்று பணிபவர் நெஞ்சத் துள்ளார்
துத்தியைந் தலைய நாகஞ் சூழ்சடை முடிமேல் வைத்து
உத்தர மலையர் பாவை யுமையவள் நடுங்க அன்று
அத்தியி னுரிவை போர்த்தா ரதிகைவீ ரட்ட னாரே. ரு

வரிமுரி பாடி யென்றும் வல்லவா றடைந்து நெஞ்சே
கரியுரி மூட வல்ல கடவுளைக் காலத் தாலே
சுரிபுரி விரிகு ழலாள் துடியிடை பாவை யல்குல்
அரிவையோர் பாகர் போலும் அதிகைவீ ரட்ட னாரே. சு

நீதியால் நினைசெய் நெஞ்சே நிமலனை நித்த மாகப்
பாதியாம் உமைதன் னோடும் பாகமாய் நின்ற எந்தை

சோதியாய்ச் சுடர்வி ளக்காய்ச் சுண்ணவெண் ணீற தாடி
ஆதியு மீறு மாகு ரதிகைவீ ரட்ட ஞரே. எ

எல்லியும் பகலு மெல்லாந் துஞ்சுவோர்க் கொருவர் வந்து
புல்லிய மனத்துக் கோயில் புக்கனர் காம னென்னும்
வில்லியைங் கணையி னுனை வெந்துக நோக்கி யிட்டார்
அல்லியம் பழன வேலி அதிகைவீ ரட்ட ஞரே. அ

ஒன்றவே யுணர்தி ராகில் ஓங்காரத் தொருவ னுகும்
வென்றஐம் புலன்கள் தம்மை விலக்குதற் குரியீ ரெல்லாம்
நன்றவ நார ணனும் நான்முகன் நாடிக் காண்குற்
றன்றவர்க் கரியர் போலும் அதிகைவீ ரட்ட ஞரே. கூ

தடக்கையா லெடுத்து வைத்துத் தடவரை குலுங்க ஆர்த்துக்
கிடக்கையா லிடர்க ளோங்கக் கிளர்மணி முடிகள் சாய
முடக்கினூர் திருவி ரலால் முருகமர் கோதை பாகத்
தடக்கினு ரென்னை யாளும் அதிகைவீ ரட்ட ஞரே. கo

திருச்சிற்றம்பலம்

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

நம்பனே எங்கள் கோவே நாதனே ஆதி மூர்த்தி
பங்கனே பரம யோகி என்றென்றே பரவி நாளும்
செம்பொனே பவளக் குன்றே திகழ்மலர்ப் பாதங் காண்பான்
அன்பனே அலேந்து போனேன் அதிகைவீ ரட்ட னீரே. க

பொய்யினுல் மிடைந்த போர்வை புரைபுரை அழுகி வீழ
மெய்யனுய் வாழ மாட்டேன் வேண்டிற்ருென் றைவர் வேண்டார்
செய்யதா மரைக ளன்ன சேவடி இரண்டுங் காண்பான்
ஐயநான் அலந்து போனேன் அதிகைவீ ரட்ட னீரே. உ

நீதியால் வாழ மாட்டேன் நித்தலுந் தூயே னல்லேன்
ஓதியும் உணர மாட்டேன் உன்னையுள் வைக்க மாட்டேன்

சோதியே சுடரே யுன்றன் தூமலர்ப் பாதங் காண்பான்
ஆதியே அலந்து போனேன் அதிகைவீ ரட்ட னீரே. ௩

தெருளுமா தெருள மாட்டேன் தீவினைச் சுற்ற மென்னும்
பொருளுளே யழுந்தி நாளும் போவதோர் நெறியுங் காணேன்
இருளுமா மணிகண் டாநின் இணையடி இரண்டுங் காண்பான்
அருளுமா றருள வேண்டும் அதிகைவீ ரட்ட னீரே. ௪

அஞ்சினால் இயற்றப் பட்ட ஆக்கைபெற் றதனுள் வாழும்
அஞ்சினால் அடர்க்கப் பட்டிங் குழிதரும் ஆத னேனை
அஞ்சினால் உய்க்கும் வண்ணங் காட்டினாய்க் கச்சந் தீர்ந்தேன்
அஞ்சினால் பொலிந்த சென்னி அதிகைவீ ரட்ட னீரே. ௫

உறுகயி றூசல் போல ஒன்றுவிட் டொன்று பற்றி
மறுகயி றூசல் போல வந்துவந் துலவு நெஞ்சம்
பெறுகயி றூசல் போலப் பிறைபுல்கு சடையாய் பாதத்
தறுகயி றூச லானேன் அதிகைவீ ரட்ட னீரே. ௬

கழித்திலேன் காம வெந்நோய் காதன்மை என்னும் பாசம்
ஒழித்திலேன் ஊன்கண் நோக்கி உணர்வெனும் இமைதி றந்து
விழித்திலேன்வெளிறுதோன்றவினை யெனுஞ்சரக்குக்கொண்டேன்
அழித்திலேன் அயர்த்துப் போனேன் அதிகைவீ ரட்ட னீரே. ௭

மன்றத்துப் புன்னை போல மரம்படு துயர மெய்தி
ஒன்றினால் உணர மாட்டேன் உன்னையுள் வைக்க மாட்டேன்
கன்றிய காலன் வந்து கருக்குழி விழுப்ப தற்கே
அன்றினான் அலமந் திட்டேன் அதிகைவீ ரட்ட னீரே. ௮

பிணிவிடா ஆக்கை பெற்றேன் பெற்றமொன் றேறு வானே
பணிவிடா இடும்பை என்னும் பாசனத் தழுந்து கின்றேன்
துணிவிலேன் தூய னல்லேன் தூமலர்ப் பாதங் காண்பான்
அணியனாய் அறிய மாட்டேன் அதிகைவீ ரட்ட னீரே. ௯

திருவினாள் கொழுந னாருந் திசைமுக முடைய கோவும்
இருவரும் எழுந்து வீழ்ந்தும் இணையடி காண மாட்டா
ஒருவனே எம்பி ரானே உன்திருப் பாதங் காண்பான்
அருவனே அருள வேண்டும் அதிகைவீ ரட்ட னீரே. ௰

திருச்சிற்றம்பலம்

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

மடக்கினார் புலியின் தோலை மாமணி நாகங் கச்சா
முடக்கினார் முகிழ்வெண் திங்கள் மொய்சடைக் கற்றை தன்மேல்
தொடக்கினார் தொண்டைச் செவ்வாய்த் துடியிடைப்பரவையல்குல்
அடக்கினார் கெடில வேலி அதிகைவீ ரட்ட னாரே. ௧

சூடினார் கங்கை யாளைச் சூடிய துழனி கேட்டங்
கூடினாள் நங்கை யாளும் ஊடலை யொழிக்க வேண்டிப்
பாடினார் சாம வேதம் பாடிய பாணி யாலே
ஆடினார் கெடில வேலி அதிகைவீ ரட்ட னாரே. ௨

கொம்பினார் குழைத்த வேனற் கோமகன் கோல நீர்மை
நம்பினார் காண லாகா வகையதோர் நடலை செய்தார்
வெம்பினார் மதில்கள் மூன்றும் வில்லிடை எரித்து வீழ்த்த
அம்பினார் கெடில வேலி அதிகைவீ ரட்ட னாரே. ௩

மறிபடக் கிடந்த கையர் வளரிள மங்கை பாகம்
செறிபடக் கிடந்த செக்கர்ச் செழுமதிக் கொழுந்து சூடிப்
பொறிபடக் கிடந்த நாகம் புகையுமிழ்ந் தழல வீக்கிக்
கிறிபட நடப்பர் போலுங் கெடிலவீ ரட்ட னாரே. ௪

நரிவரால் கவ்வச் சென்று நற்றசை யிழந்த தொத்த
தெரிவரால் மால்கொள் சிந்தை தீர்ப்பதோர் சிந்தை செய்வார்
வரிவரால் உகளுந் தெண்ணீர்க் கழனிசூழ் பழன வேலி
அரிவரால் வயல்கள் சூழ்ந்த அதிகைவீ ரட்ட னாரே. ௫

புள்ளலைத் துண்ட ஓட்டில் உண்டுபோய்ப் பலாசங் கொம்பின்
சுள்ளலைச் சுடலை வெண்ணீ றணிந்தவர் மணிவெள் ளேற்றுத்
துள்ளலைப் பாகன் றன்னைத் தொடர்ந்திங்கே கிடக்கின் றேனை
அள்ளலைக் கடப்பித் தாளும் அதிகைவீ ரட்ட னாரே. ௬

நீறிட்ட நுதலர் வேலை நீலஞ்சேர் கண்டர் மாதர்
கூறிட்ட மெய்ய ராகிக் கூறினர் ஆறும் நான்குங்

கீறிட்ட திங்கள் சூடிக் கிளர்தரு சடையி னுள்ளால்
ஆறிட்டு முடிப்பர் போலும் அதிகைவீ ரட்ட னாரே. எ

காணிலார் கருத்தில் வாரார் திருத்தலார் பொருத்த லாகார்
ஏணிலார் இறப்பும் இல்லார் பிறப்பிலார் துறக்க லாகார்
நாணிலார் ஐவ ரோடும் இட்டெனை விரவி வைத்தார்
ஆணலார் பெண்ணும் அல்லார் அதிகைவீ ரட்ட னாரே. அ - கூ

தீர்த்தமா மலையை நோக்கிச் செருவலி அரக்கன் சென்று
பேர்த்தலும் பேதை அஞ்சப் பெருவிர லதனை யூன்றிச்
சீர்த்தமா முடிகள் பத்துஞ் சிதறுவித் தவனை யன்று
ஆர்த்தவா யலற வைத்தார் அதிகைவீ ரட்ட னாரே. கO

திருச்சிற்றம்பலம்

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

முன்பெலா மிளைய காலம் மூர்த்தியை நினையா தோடிக்
கண்கண விருமி னாளுங் கருத்தழிந் தருத்த மின்றிப்
பின்பக லுணங்க லட்டும் பேதைமார் போன்றே னுள்ளம்
அன்பனாய் வாழ மாட்டேன் அதிகைவீ ரட்ட னீரே. க

கறைப்பெருங் கண்டத் தானே காய்கதிர் நமனை யஞ்சி
நிறைப்பெருங் கடலைக் கண்டேன் நீள்வரை யுச்சி கண்டேன்
பிறைப்பெருஞ் சென்னி யானே பிஞ்ஞகா இவைய னைத்தும்
அறுப்பதோ ருபாயங் காணேன் அதிகைவீ ரட்ட னீரே. உ

நாதனா ரென்ன நாளு நடுங்கின ராகித் தங்கள்
ஏதங்க ளறிய மாட்டா ரிணையடி தொழுதோ மென்பார்
ஆதனா னவனென் றெள்கி அதிகைவீ ரட்ட னேநின்
பாதநான் பரவா துய்க்கும் பழவினைப் பரிசி லேனே. ௩

சுடலைசேர் சுண்ண மெய்யர் சுரும்புண விரிந்த கொன்றைப்
படலைசே ரலங்கல் மார்பர் பழனஞ்சேர் கழனித் தெங்கின்

மடலைநீர் கிழிய வோடி யதனிடை மணிகள் சிந்தும்
கெடிலவீ ரட்ட மேய கிளர்சடை முடிய னாரே. ௪

மந்திர முள்ள தாக மறிகட லெழுநெய் யாக
இந்திரன் வேள்வித் தீயி லெழுந்ததோர் கொழுந்தின் வண்ணம்
சிந்திர மாக நோக்கித் தெருட்டுவார் தெருட்ட வந்து
கந்திரம் முரலுஞ் சோலைக் கானலங் கெடிலத் தாரே. ௫-௬-௭-௮-௯

மைஞ்ஞல மனைய கண்ணாள் பங்கன்மா மலையை யோடி
மெய்ஞ்ஞரம் புதிரம் பில்க விசைதணிந் தரக்கன் வீழ்ந்து
கைஞ்ஞரம் பெழுவிக் கொண்டு காதலால் இனிது சொன்ன
கின்னரங் கேட்டு கந்தார் கெடிலவீ ரட்ட னாரே. ௧௦

திருச்சிற்றம்பலம்

திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

மாசிலொள் வாள்போன் மறியு மணிநீர்த் திரைத்தொகுதி
ஊசலை யாடியங் கொண்சிறை யன்னம் உறங்கலுற்றால்
பாசறை நீலம் பருகிய வண்டுபண் பாடல்கண்டு
வீசுங் கெடில வடகரைத் தேயெந்தை வீரட்டமே. ௧

பைங்கால் தவளை பறைகொட்டப் பாசிலை நீர்ப்படுகர்
அங்காற் குவளைமே லாவி உயிர்ப்ப அருகுலவும்
செங்காற் குருகிவை சேருஞ் செறிகெடி லக்கரைத்தே
வெங்காற் குருசிலை வீரன் அருள்வைத்த வீரட்டமே. ௨

அம்மலர்க் கண்ணிய ரஞ்சனஞ் செந்துவர் வாயிளையார்
வெம்முலைச் சாந்தம் விலைபெறு மாலை யெடுத்தவர்கள்
தம்மருங் குற்கிரங் கார்தடந் தோள்மெலி யக்குடைவார்
விம்மு புனற்கெடி லக்கரைத் தேயெந்தை வீரட்டமே. ௩

மீனுடைத் தண்புனல் வீரட்ட ரேநும்மை வேண்டுகின்ற
தியானுடைச் சில்குறை யொன்றுள தால்நறுந் தண்ணெருக்கின்

தேனுடைக் கொன்றைச் சடையுடைக் கங்கைத் திரைதவழும்
கூனுடைத் திங்கட் குழவியெப் போதுங் குறிக்கொண்மினே. ௪

ஆரட்ட தேனும் இரந்துண் டகமக வன்றிரிந்து
வேரட்ட நிற்பித் திடுகின்ற தால்விரி நீர்ப்பரவைச்
சூரட்ட வேலவன் தாதையைச் சூழ்வய லாரதிகை
வீரட்டத் தானை விரும்பா வரும்பாவ வேதனையே. ௫

படர்பொற் சடையும் பகுவா யரவும் பனிமதியும்
சுடலைப் பொடியுமெல் லாமுள வேயவர் தூயதெண்ணீர்க்
கெடிலக் கரைத்திரு வீரட்ட ராவர்கெட் டேனடைந்தார்
நடலைக்கு நற்றுணை யாகுங்கண் டீரவர் நாமங்களே. ௬

காளங் கடந்ததொர் கண்டத்த ராகிக்கண் ணார்கெடில
நாளங் கடிக்கொர் நகரமு மாதிற்கு நன்கிசைந்த
தாளங்கள் கொண்டுங் குழல்கொண்டு மியாழ்கொண்டுந் தாமங்ஙனே
வேடங்கள் கொண்டும் விசும்புசெல் வாரவர் வீரட்டரே. ௭-௰

திருச்சிற்றம்பலம்

திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

கோணன் மாமதி சூடியோர் கோவணம்
நாணில் வாழ்க்கை நயந்தும் பயனிலை
பாணில் வீணை பயின்றவன் வீரட்டம்
காணில் அல்லதென் கண்துயில் கொள்ளுமே. ௧

பண்ணி னைப்பவ ளத்திரள் மாமணி
அண்ண லைஅம ரர்தொழும் ஆதியைச்
சுண்ண வெண்பொடி யான்திரு வீரட்டம்
நண்ணி லல்லதென் கண்துயில் கொள்ளுமே. ௨

உற்ற வர்தம் உறுநோய் களைபவர்
பெற்றம் ஏறும் பிறங்கு சடையினர்

சுற்றும் பாய்புனல் சூழ்திரு வீரட்டம்
கற்கி லல்லதென் கண்டுயில் கொள்ளுமே. ௩

முற்றா வெண்மதி சூடும் முதல்வனார்
செற்றார் வாழுந் திரிபுரந் தீயெழ
விற்றான் கொண்டெயில் எய்தவர் வீரட்டம்
கற்றா லல்லதென் கண்டுயில் கொள்ளுமே. ௪

பல்லா ரும்பல தேவர் பணிபவர்
நல்லா ருந்நயந் தேத்தப் படுபவன்
வில்லால் மூவெயில் எய்தவன் வீரட்டம்
கல்லே னாகிலென் கண்டுயில் கொள்ளுமே. ௫

வண்டார் கொன்றையும் மத்தம் வளர்சடைக்
கொண்டான் கோல மதியோ டரவமும்
விண்டார் மும்மதி லெய்தவன் வீரட்டம்
கண்டா லல்லதென் கண்டுயில் கொள்ளுமே. ௬

அரையார் கோவண ஆடைய னாறெலாந்
திரையார் ஒண்புனல் பாய்கெடி லக்கரை
விரையார் நீற்றன் விளங்குவீ ரட்டன்பால்
கரையே னாகிலென் கண்டுயில் கொள்ளுமே. ௭

நீறு டைத்தடந் தோளுடை நின்மலன்
ஆறு டைப்புனல் பாய்கெடி லக்கரை
ஏறு டைக்கொடி யான்திரு வீரட்டம்
கூறி லல்லதென் கண்டுயில் கொள்ளுமே. ௮

செங்கண் மால்விடை யேறிய செல்வனார்
பைங்க ணானையின் ஈருரி போர்த்தவர்
அங்கண் ஞாலம தாகிய வீரட்டம்
கங்கு லாகஎன் கண்டுயில் கொள்ளுமே. ௯

பூணா ணாரம் பொருந்த வுடையவர்
நாணா கவ்வரை வில்லிடை யம்பினால்
பேணார் மும்மதி லெய்தவன் வீரட்டம்
காணே னாகிலென் கண்டுயில் கொள்ளுமே. ௧௦

வரையார்ந் தவயி ரத்திரள் மாணிக்கம்
திரையார்ந் தபுனல் பாய்கெடி லக்கரை
விரையார் நீற்றன் விளங்கிய வீரட்டம்
உரையே னாகிலென் கண்துயில் கொள்ளுமே. கக

உலந்தார் வெண்தலை உண்கல னாகவே
வலந்தான் மிக்கவவ் வாளரக் கன்றனைச்
சிலம்பார் சேவடி யூன்றினான் வீரட்டம்
புலம்பே னாகிலென் கண்துயில் கொள்ளுமே. கஉ

திருச்சிற்றம்பலம்

திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

எட்டு நாண்மலர் கொண்டவன் சேவடி
மட்ட லரிடு வார்வினை மாயுமால்
கட்டித் தேன்கலந் தன்ன கெடிலவீ
ரட்ட னாரடி சேரு மவருக்கே. க

நீள மாகினைந் தெண்மல ரிட்டவர்
கோள வல்வினை யுங்குறை விப்பரால்
வாள மாவிழி யுங்கெடி லக்கரை
வேளி சூழ்ந்தழ காயவீ ரட்டரே. உ

கள்ளி னண்மல ரோரிரு நான்குகொண்
டுள்கு வாரவர் வல்வினை யோட்டுவார்
தெள்ளு நீர்வயல் பாய்கெடி லக்கரை
வெள்ளை நீறணி மேனிவீ ரட்டரே. ௩

பூங்கொத் தாயின மூன்றொடோ ரைந்திட்டு
வாங்கி நின்றவர் வல்வினை யோட்டுவார்
வீங்கு தண்புனல் பாய்கெடி லக்கரை
வேங்கைத் தோலுடை யாடைவீ ரட்டரே. ௪

தேனப் போதுகள் மூன்றெடோ ரைந்துடன்
தானப் போதிடு வார்வினை தீர்ப்பவர்
மீனத் தண்புனல் பாய்கெடி லக்கரை
வேன லானை யுரித்தவீ ரட்டரே. ௬

ஏழித் தொன்மலர் கொண்டு பணிந்தவர்
ஊழித் தொல்வினை யோட அகற்றுவார்
பாழித் தண்புனல் பாய்கெடி லக்கரை
வேழத் தின்னுரி போர்த்தவீ ரட்டரே. ௬

உரைசெய் நூல்வழி யொண்மலர் எட்டிடத்
திரைகள் போல்வரு வல்வினை தீர்ப்பரால்
வரைகள் வந்திழி யுங்கெடி லக்கரை
விரைகள் சூழ்ந்தழ காயவீ ரட்டரே. ௭

ஓலி வண்டறை யொண்மலர் எட்டினால்
காலை யேத்த வினையைக் கழிப்பரால்
ஆலி வந்திழி யுங்கெடி லக்கரை
வேலி சூழ்ந்தழ காயவீ ரட்டரே. ௮

தாரித் துள்ளித் தடமலர் எட்டினால்
பாரித் தேத்தவல் லார்வினை பாற்றுவார்
மூரித் தெண்திரை பாய்கெடி லக்கரை
வேரிச் செஞ்சடை வேய்ந்தவீ ரட்டரே. ௯

அட்ட புட்ப மவைகொளு மாறுகொண்
டட்ட மூர்த்தி அனாதிதன் பாலணைந்
தட்டு மாறுசெய் கிற்பஅ திகைவீ
ரட்ட னாடி சேரு மவர்களே. ௧௦

திருச்சிற்றம்பலம்

ஏழைத் திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

வெறிவிரவு கூவிளநல் தொங்க லானை வீரட்டத் தானைவெள்ளேற்றி னானைப், பொறியரவி னானைப்புள் ளூர்தி யானைப் பொன்னிறத்தி னானைப் புகழ்தக் கானை, அறிதற் கரியசீ ரம்மான் தன்னை அதியரைய மங்கை யமர்ந்தான் தன்னை, எறிகெடிலத் தானை இறைவன் தன்னை யேழையே னான்பண் டிகழ்ந்த வாறே. க

வெள்ளிக் குன்றன்ன விடையான் தன்னை வில்வலான் வில்வட்டங் காய்ந்தான் தன்னை, புள்ளி வரிநாகம் பூண்டான் தன்னைப் பொன்பிதிர்ந் தன்ன சடையான் தன்னை, வள்ளி வளைத்தோள் முதல்வன் தன்னை வாரா வுலகருள வல்லான் தன்னை, எள்கவிடு பிச்சை யேற்பான் தன்னை யேழையே னான்பண் டிகழ்ந்த வாறே. உ

முந்தி யுலகம் படைத்தான் தன்னை மூவா முதலாய மூர்த்தி தன்னைச், சந்த வெண்டிங்க ளணிந்தான் தன்னைத் தவநெறிகள் சாதிக்க வல்லான் தன்னைச், சிந்தையில் தீர்வினையைத் தேனைப் பாலைச் செழுங்கெடில வீரட்டம் மேவி னானை, எந்தை பெருமானை ஈசன் தன்னை யேழையே னான்பண் டிகழ்ந்த வாறே. ங

மந்திரமும் மறைப்பொருளு மானான் தன்னை மதியமும் ஞாயிறுங் காற்றுந் தீயும், அந்தரமு மலைகடலு மானான் தன்னை யதியரைய மங்கை யமர்ந்தான் தன்னைக், கந்தருவஞ் செய்திருவர் கழல்கை கூப்பிக் கடிமலர்கள் பலதூவிக் காலை மாலை, இந்திரனும் வானவரும் தொழச்செல் வானை ஏழையே னான்பண் டிகழ்ந்த வாறே. ச

ஒருபிறப்பி லானடியை யுணர்ந்துங் காணா ருயர்கதிக்கு வழி தேடிப் போக மாட்டார், வருபிறப்பொன் றுணராது மாசு பூசி வழி காணா தவர்போல்வார் மனத்த னாகி, அருபிறப்பை யறுப்பிக்கும் அதிகை யூரன் அம்மான்றன் அடியிணையே அணைந்து வாழா, திரு பிறப்பும் வெறுவியரா யிருந்தார் சொற்கேட் டேழையே னான்பண் டிகழ்ந்த வாறே. ரு

ஆறேற்க வல்ல சடையான் தன்னை அஞ்சனம் போலு மிடற் றான் தன்னைக், கூறேற்கக் கூறமர வல்லான் தன்னைக் கோல் வளைக்கை மாதராள் பாகன் தன்னை, நீறேற்கப் பூசும் அகலத் தானை நின்மலன் தன்னை நிமலன் தன்னை, ஏறேற்க வேறுமா வல்லான் தன்னை ஏழையே னான்பண் டிகழ்ந்த வாறே. ௬

குண்டாக்க னாயுழன்று கையி லுண்டு குவிமுலையார் தம் முன்னே நாண மின்றி, உண்டியுகந் தமணே நின்றார் சொற்கேட் டுடனாகி யுழிதந்தே னுணர்வொன் றின்றி, வண்டுலவு கொன்றையங் கண்ணி யானை வானவர்க ளேத்தப் படுவான் தன்னை, எண் டிசைக்கும் மூர்த்தியாய் நின்றான் தன்னை ஏழையே னான்பண் டிகழ்ந்த வாறே. ௭

உறிமுடித்த குண்டிகைதங் கையிற் றூக்கி ஊத்தைவாய்ச் சம ணர்க்கோர் குண்டாக் கனாய்க், கறிவிரவு நெய்சோறு கையி லுண்டு கண்டார்க்குப் பொல்லாத காட்சி யானேன், மறிதிரைநீர்ப் பவ்வ நஞ்சுண்டான் தன்னை மறித்தொருகால் வல்வினையேன் நினைக்க மாட்டேன், எறிகெடில நாடர் பெருமான் தன்னை ஏழையே னான்பண் டிகழ்ந்த வாறே. ௮

நிறைவார்ந்த நீர்மையாய் நின்றான் தன்னை நெற்றிமேற் கண் ணொன் றுடையான் தன்னை, மறையானை மாசொன்றி லாதான் தன்னை வானவர்மேல் மலரடியை வைத்தான் தன்னைக், கறையானைக் காதார் குழையான் தன்னைக் கட்டங்கம் ஏந்திய கையி னானை, இறை யானை எந்தை பெருமான் தன்னை ஏழையே னான்பண் டிகழ்ந்த வாறே. ௯

தொல்லைவான் சூழ்வினைகள் சூழப் போந்து தூற்றியே னாற்றி யேன் சுடராய் நின்று, வல்லையே இடர்தீர்த்திங் கடிமை கொண்ட வானவர்க்குந் தானவர்க்கும் பெருமான் தன்னைக், கொல்லைவாய்க் குருந்தொசித்துக் குழலும் ஊதுங் கோவலனும் நான்முகனுங் கூடி யெங்கும், எல்லைகாண் பரியானை எம்மான் தன்னை ஏழையே னான்பண் டிகழ்ந்த வாறே. ௧௦

முலைமறைக்கப் பட்டுநீ ராடாப் பெண்கள் முறைமுறையால் நந்தெய்வ மென்று தீண்டித், தலைபறிக்குந் தன்மையர்க ளாகி நின்று தவமேயென் றவஞ்செய்து தக்க தோரார், மலைமறிக்கச் சென்ற இலங்கைக்கோனை மதனழியச் செற்றசே வடியி னானை, இலைமறித்த கொன்றையந் தாரான் தன்னை ஏழையே னன்பண் டிகழ்ந்த வாறே.

திருச்சிற்றம்பலம்

அடையாளத் திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

சந்திரனை மாகங்கைத் திரையால் மோதச் சடாமகுடத் திருத்துமே சாம வேத, கந்தருவம் விரும்புமே கபால மேந்து கையனே மெய்யனே கனக மேனிப், பந்தணவு மெல்விரலாள் பாக னுமே பசுவேறு மேபரம யோகி யாமே, ஐந்தலைய மாசுணங்கொண் டரை யார்க் கும்மே அவனுகில் அதிகைவீ ரட்ட னுமே. க

ஏறேறி யேழுலகும் உழிதர் வானே யிமையவர்கள் தொழு தேத்த இருக்கின் றானே, பாறேறு படுதலையிற் பலிகொள் வானே படவரவந் தடமார்பிற் பயில்வித் தானே, நீறேறு செழும்பவளக் குன்றொப் பானே நெற்றிமே லொற்றைக்கண் நிறைவித் தானே, ஆறேறு சடைமுடிமேற் பிறைவைத் தானே அவனுகில் அதிகைவீ ரட்ட னுமே. உ

முண்டத்திற் பொலிந்திலங்கு மேனி யானே முதலாகி நடுவாகி முடிவா னானே, கண்டத்தில் வெண்மருப்பின் காறை யானே கதநாகங் கொண்டாடுங் காட்சி யானே, பிண்டத்தின் இயற்கைக்கோர் பெற்றி யானே பெருநிலநீர் தீவளியா காச மாகி, அண்டத்துக் கப்பாலா யிப்பா லானே அவனுகில் அதிகைவீ ரட்ட னுமே. ௩

செய்யனே கரியனே கண்டம் பைங்கண் வெள்ளெயிற்று டரவனே வினைகள் போக, வெய்யனே தண்கொன்றை மிலைத்த சென்னிச் சடையனே விளங்குமழுச் சூல மேந்துங், கையனே

காலங்கள் மூன்றா னானே கருப்புவிற் றனிக்கொடும்பூண் காமற்
காய்ந்த, ஐயனே பருத்துயர்ந்த ஆனேற் றானே அவனாகில் அதிகைவீ
ரட்ட னாமே. ௫

பாடுமே யொழியாமே நால்வே தம்மும் படர்சடைமே லொளி
திகழப் பனிவெண் திங்கள், சூடுமே அரைதிகழத் தோலும் பாம்புஞ்
சுற்றுமே தொண்டைவா யுமையோர் பாகங், கூடுமே குடமுழவம்
வீணை தாளங் குறுநடைய சிறுபூதம் முழக்க மாக்கூத், தாடுமே
அந்தடக்கை அனலேந் தும்மே அவனாகில் அதிகைவீ ரட்ட னாமே.

ஒழித்திடுமே யுள்குவா ருள்ளத் துள்ள உறுபிணியுஞ் செறு
பகையும் ஒற்றைக் கண்ணால், விழித்திடுமே காமனையும் பொடியாய்
வீழ வெள்ளப் புனற்கங்கை செஞ்ச டைமேல், இழித்திடுமே ஏழுல
குந் தானா கும்மே யியங்குந் திரிபுரங்க ளோரம் பினால், அழித்திடுமே
ஆதிமா தவத்து ளானே அவனாகில் அதிகைவீ ரட்ட னாமே. ௬

குழலோடு கொக்கரைகைத் தாளம் மொந்தை குறட்பூதம்
முன்பாடத் தானா டும்மே, கழலாடு திருவிரலாற் கரணஞ் செய்து
கனவின்கண் திருவுருவந் தான்காட் டும்மே, எழிலாருந் தோள்வீசி
நடமா டும்மே ஈமப் புறங்காட்டில் ஏமந் தோறும், அழலாடு
மேஅட்ட மூர்த்தி யாமே அவனாகில் அதிகைவீ ரட்ட னாமே. ௭

மாலாகி மதமிக்க களிறு தன்னை வதைசெய்து மற்றதனின்
உரிவை கொண்டு, மேலாலுங் கீழாலுந் தோன்றா வண்ணம் வெம்
புலால் கைகலக்க மெய்போர்த் தானே, கோலாலம் படவரைநட்
டரவு சுற்றிக் குரைகடலைத் திரையலறக் கடைந்து கொண்ட,
ஆலால முண்டிருண்ட கண்டத் தானே அவனாகில் அதிகைவீ ரட்ட
னாமே. ௮

செம்பொனாற் செய்தழகு பெய்தாற் போலுஞ் செஞ்சடை
யெம் பெருமானே தெய்வ நாறும், வம்பினாள் மலர்க்கூந்தல் உமை
யாள் காதன் மணவாள னேவலங்கை மழுவா ளனே, நம்பனே
நான்மறைகள் தொழநின் றானே நடுங்காதார் புரமூன்று நடுங்கச்

செற்ற, அம்பனே அண்டகோ சரத்து ளானே அவனுகில் அதிகைவீ ரட்ட னுமே. ௯

எழுந்ததிரை நதித்துவலை நனைந்த திங்கள் இளநிலாத் திகழ்கின்ற வளர்ச டையனே, கொழும்பவளச் செங்கனிவாய்க் காமக் கோட்டி கொங்கையிணை அமர்பொருது கோலங் கொண்ட, தழும் புளவே வரைமார்பில் வெண்ணூ லுண்டே சாந்தமொடு சந்தனத் தின் அளறு தங்கி, அழுந்தியசெந் திருவுருவில் வெண்ணீற் றுனே அவனுகில் அதிகைவீ ரட்ட னுமே. ௧௦

நெடியானும் நான்முகனும் நேடிக் காணு நீண்டானே நேரொருவ ரில்லா தானே, கொடியேறு கோலமா மணிகண்டனே கொல்வேங்கை யதளனே கோவ ணவனே, பொடியேறு மேனி யனே ஐயம் வேண்டிப் புவலோகந் திரியுமே புரிநூ லானே, அடி யாரை அமருலகம் ஆள்விக் கும்மே அவனுகில் அதிகைவீ ரட்ட னுமே. ௧௧

திருச்சிற்றம்பலம்

போற்றித் திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

எல்லாஞ் சிவனென்ன நின்ருய் போற்றி எரிசுடராய் நின்ற இறைவா போற்றி, கொல்லார் மழுவாட் படையாய் போற்றி கொல்லுங்கூற் றொன்றை யுதைத்தாய் போற்றி, கல்லாதார் காட்சிக் கரியாய் போற்றி கற்ரு ரிடும்பை களைவாய் போற்றி, வில்லால் வியனரண மெய்தாய் போற்றி வீரட்டங் காதல் விமலா போற்றி. ௧

பாட்டுக்கும் ஆட்டுக்கும் பண்பா போற்றி பல்லூழி யாய படைத்தாய் போற்றி, ஓட்டகத்தே யூணு உகந்தாய் போற்றி உள்குவா ருள்ளத் துறைவாய் போற்றி, காட்டகத்தே ஆடல் மகிழ்ந்தாய் போற்றி கார்மேக மன்ன மிடற்ருய் போற்றி, ஆட்டுவ தோர் நாக மசைத்தாய் போற்றி அலைகெடில வீரட்டத் தாள்வாய் போற்றி. ௨

முல்லையங் கண்ணி முடியாய் போற்றி முழுநீறு பூசிய மூர்த்தி போற்றி, எல்லை நிறைந்த குணத்தாய் போற்றி ஏழ்நரம்பி னோசை படைத்தாய் போற்றி, சில்லைச் சிரைத்தலையி லூணு போற்றி சென் றடைந்தார் தீவினைகள் தீர்ப்பாய் போற்றி, தில்லைசிற் றம்பலம் மேயாய் போற்றி திருவீரட் டானத்தெஞ் செல்வா போற்றி. ௩

சாம்ப ரகலத் தணிந்தாய் போற்றி தவநெறிகள் சாதித்து நின்றாய் போற்றி, கூம்பித் தொழுவார்தங் குற்றே வலைக் குறிக் கொண் டிருக்குங் குழகா போற்றி, பாம்பும் மதியும் புனலுந் தம்மிற் பகைதீர்த் துடன்வைத்த பண்பா போற்றி, ஆம்பல் மலர் கொண் டணிந்தாய் போற்றி அலைகெடில வீரட்டத் தாள்வாய் போற்றி. ௪

நீறேறு நீல மிடற்றாய் போற்றி நிழல்திகழும் வெண்மழுவாள் வைத்தாய் போற்றி, கூறே றுமையொருபாற் கொண்டாய் போற்றி கோளரவம் ஆட்டுங் குழகா போற்றி, ஆறேறு சென்னி யுடையாய் போற்றி அடியார்கட் காரமுத மானாய் போற்றி, ஏறேற என்றும் உகப்பாய் போற்றி யிருங்கெடில வீரட்டத் தெந்தாய் போற்றி. ௫

பாடுவார் பாட லுகப்பாய் போற்றி பழையாற்றுப் பட்டீச் சுரத்தாய் போற்றி, வீடுவார் வீடருள வல்லாய் போற்றி வேழத் துரிவெருவப் போர்த்தாய் போற்றி, நாடுவார் நாடற் கரியாய் போற்றி நாக மரைக்கசைத்த நம்பா போற்றி, ஆடும் ஆன்ஐந்தும் உகப்பாய் போற்றி அலைகெடில வீரட்டத் தாள்வாய் போற்றி. ௬

மண் துளங்க ஆடல் மகிழ்ந்தாய் போற்றி மால்கடலும் மால் விசும்பு மானாய் போற்றி, விண் துளங்க மும்மதிலு மெய்தாய் போற்றி வேழத் துரிமூடும் விகிர்தா போற்றி, பண் துளங்கப் பாடல் பயின்றாய் போற்றி பார்முழுதும் ஆய பரமா போற்றி, கண் துளங்கக் காமனைமுன் காய்ந்தாய் போற்றி கார்க்கெடிலங் கொண்ட கபாலீ போற்றி. ௭

வெஞ்சினவெள் ளேறூர்தி யுடையாய் போற்றி விரிசடைமேல் வெள்ளம் படைத்தாய் போற்றி, துஞ்சாப் பலிதேருந் தோன்றால்

போற்றி தொழுதகை துன்பர் துடைப்பாய் போற்றி,நஞ்சொடுங்குங் கண்டத்து நாதா போற்றி நான் மறையோ டாறங்க மானாய் போற்றி, அஞ்சொலாள் பாகம் அமர்ந்தாய் போற்றி அலைகெடில வீரட்டத் தாள்வாய் போற்றி. அ

சிந்தையாய் நின்ற சிவனே போற்றி சீபர்ப்ப தஞ்சிந்தை செய்தாய் போற்றி, புந்தியாய்ப் புண்டரிகத் துள்ளாய் போற்றி புண்ணியனே போற்றி புனிதா போற்றி, சந்தியாய் நின்ற சதுரா போற்றி தத்துவனே போற்றியென் தாதாய் போற்றி, அந்தியாய் நின்ற அரனே போற்றி அலைகெடில வீரட்டத் தாள்வாய் போற்றி.

முக்கணா போற்றி முதல்வா போற்றி முருகவேள் தன்னைப் பயந்தாய் போற்றி, தக்கணா போற்றி தருமா போற்றி தத்துவனே போற்றியென் தாதாய் போற்றி,தொக்கணா வென்றிருவர் தோள்கை கூப்பத் துளங்கா தெரிசுடராய் நின்றாய் போற்றி, எக்கண்ணுங் கண்ணிலேன் எந்தாய் போற்றி எறிகெடில வீரட்டத் தீசா போற்றி. ௧௦

திருச்சிற்றம்பலம்

திருவடித் திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

அரவணையான் சிந்தித் தரற்றும்மடி அருமறையான் சென்னிக் கணியாமடி, சரவணத்தான் கைதொழுது சாரும்மடி சார்ந்தார்கட் கெல்லாஞ் சரணாமடி, பரவுவார் பாவம் பறைக்கும்மடி பதினெண் கணங்களும் பாடும்மடி, திரைவிரவு தென்கெடில நாடன்னடி திரு வீரட் டானத்தென் செல்வன்னடி. ௧

கொடுவினையா ரென்றுங் குறுகாவடி குறைந்தடைந்தார் ஆழாமைக் காக்கும்மடி, படுமுழவம் பாணி பயிற்றும்மடி பதைத் தெழுந்த வெங்கூற்றைப் பாய்ந்தவடி, கடுமுரணே றூர்ந்தான் கழற் சேவடி கடல்வையங் காப்பான் கருதும்மடி, நெடுமதியங் கண்ணி யணிந்தானடி நிறைகெடில வீரட்டம் நீங்காவடி. ௨

வைதெழுவார் காமம்பொய் போகாவடி வஞ்சவலைப் பாடொன் றில்லாவடி, கைதொழுது நாமேத்திக் காணும்மடி கணக்கு வழக்கைக் கடந்தவடி, நெய்தொழுது நாமேத்தி ஆட்டும்மடி நீள்விசும்பை யூடறுத்து நின்றவடி, தெய்வப் புனற்கெடில நாடன்னடி திருவீரட் டானத்தெஞ் செல்வன்னடி. ௩

அரும்பித்த செஞ்ஞாயி றேய்க்கும்மடி அழகெழுத லாகா அருட்சேவடி, சுரும்பித்த வண்டினங்கள் சூழ்ந்தவடி சோமனையுங் காலனையுங் காய்ந்தவடி, பெரும்பித்தர் கூடிப் பிதற்றும்மடி பிழைத்தார் பிழைப்பறிய வல்லவடி, திருந்துநீர்த் தென்கெடில நாடன்னடி திருவீரட் டானத்தெஞ் செல்வன்னடி. ௪

ஒருகாலத் தொன்றாகி நின்றவடி ஊழிதோ றூழி உயர்ந்தவடி, பொருகழலும் பல்சிலம்பும் ஆர்க்கும்மடி புகழ்வார் புகழ்த்தகைய வல்லவடி, இருநிலத்தார் இன்புற்றங் கேத்தும்மடி இன்புற்றார் இட்டபூ ஏறும்மடி, திருவதிகைத் தென்கெடில நாடன்னடி திருவீரட் டானத்தெஞ் செல்வன்னடி. ௫

திருமகட்குச் செந்தா மரையாமடி சிறந்தவர்க்குத் தேனாய் விளைக்கும்மடி, பொருளவர்க்குப் பொன்னுரையாய் நின்றவடி புகழ்வார் புகழ்த்தகைய வல்லவடி, உருவிரண்டு மொன்றோடொன் றொவ்வாவடி உருவென் றுணரப் படாதவடி, திருவதிகைத் தென் கெடில நாடன்னடி திருவீரட் டானத்தெஞ் செல்வன்னடி. ௬

உரைமாலை யெல்லா முடையவடி உரையா லுணரப் படாதவடி, வரைமாதை வாடாமை வைக்கும்மடி வானவர்கள் தாம்வணங்கி வாழ்த்தும்மடி, அரைமாத் திரையில் லடங்கும்மடி யகலம் அளக்கிற்பா ரில்லாவடி, கரைமாங் கலிக்கெடில நாடன்னடி கமழ் வீரட் டானக் காபாலியடி. ௭

நறுமலராய் நாறும் மலர்ச்சேவடி நடுவா யுலகநா டாயவடி, செறிகதிருந் திங்களுமாய் நின்றவடி தீத்திரளா யுள்ளே திகழ்ந்தவடி, மறுமதியை மாசு கழுவும்மடி மந்திரமுந் தந்திரமும் ஆயவடி,

செறிகெடில நாடர் பெருமானடி திருவீரட் டானத்தெஞ் செல்வன்னடி. கு

அணியனவுஞ் சேயனவு மல்லாவடி யடியார்கட் காரமுத மாயவடி, பணிபவர்க்குப் பாங்காக வல்லவடி பற்றற்ருர் பற்றும் பவளவடி, மணியடி பொன்னடி மாண்பாமடி மருந்தாய்ப் பிணி தீர்க்க வல்லவடி, தணிபாடு தண்கெடில நாடன்னடி தகைசார் வீரட்டத் தலைவன்னடி. க

அந்தா மரைப்போ தலர்ந்தவடி அரக்கனையும் ஆற்ற லழித்த வடி, முந்தாகி முன்னே முளைத்தவடி முழங்கழலாய் நீண்டவெம் மூர்த்தியடி, பந்தாடு மெல்விரலாள் பாகன்னடி பவளத் தடவரையே போல்வானடி, வெந்தார் சுடலைநீ றாடும்மடி வீரட்டங் காதல் விம லன்னடி. கo

திருச்சிற்றம்பலம்

காப்புத் திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

செல்வப் புனற்கெடில வீரட்டமுஞ் சிற்றேமமும் பெருந்தண் குற்றாலமும், தில்லைச்சிற் றம்பலமுந் தென்கூடலுந் தென்னானைக் காவுஞ்சி ராப்பள்ளியும், நல்லூருந் தேவன்குடி மருகலும் நல்லவர்கள் தொழுதேத்து நாரையூரும், கல்லலகு நெடும்புருவக் கபால மேந்திக் கட்டங்கத் தோடுறைவார் காப்புக்களே. க

தீர்த்தப் புனற்கெடில வீரட்டமுந் திருக்கோவல் வீரட்டம் வெண்ணெய் நல்லூர், ஆர்த்தருவி வீழ்சுனைநீ ரண்ணாமலை யறையணி நல்லூரும் அரநெறியும், ஏத்துமின்கள் நீரேத்த நின்ற ஈசன் இடைமரு தின்னம்ப ரேகம்பமும், கார்த்தயங்கு சோலைக் கயிலாயமுங் கண்ணுதலான் தன்னுடைய காப்புக்களே. உ

சிறையார் புனற்கெடில வீரட்டமுந் திருப்பா திரிப்புலியூர் திருவா மாத்தூர், துறையார் வனமுனிக ளேத்த நின்ற சோற்றுத்

துறை அருத்தி ரெய்த்தா னமும், அறையார் புனலொழுகு காவிரிசூழ் ஞயாற் றமுதன் பழனம் நல்ல, கறையார் பொழில்புடைசூழ் கானப் பேருங் கழுக்குன்றுந் தம்முடைய காப்புக்களே. ௩

திரையார் புனற்கெடில வீரட்டமுந் திருவாரூர் தேவூர் திரு நெல்லிக்கா, உரையார் தொழநின்ற ஒற்றியூரும் ஒத்தூரும் மாற்பேறும் மாந்துறையும், வரையா ரருவி சூழ்மா நதியும் மாகாளங் கேதாரம் மாமேருவும், கரையார் புனலொழுகு காவிரிசூழ் கடம்பந் துறை யுறைவார் காப்புக்களே. ௪

செழுநீர்ப் புனற்கெடில வீரட்டமுந் திரிபுராந் தகந்தென்னூர் தேவீச்சரம், கொழுநீர் புடைசுழிக்குங் கோட்டுக் காவுங் குடமூக்குங் கோகரணங் கோலக்காவும், பழிநீர்மை யில்லாப் பனங்காட் டூரும் பனையூர் பயற்றூர் பராய்த்துறையும், கழுநீர் மதுவிரியுங் காளிங்க முங் கணபதீச் சரத்தார்தங் காப்புக்களே. ௫

தெய்வப் புனற்கெடில வீரட்டமுஞ் செழுந்தண் பிடவூருஞ் சென்று நின்று, பவ்வந் திரியும் பருப்பதமும் பறியலூர் வீரட்டம் பாவநாசம், மவ்வந் திரையுமணி முத்தமும் மறைக்காடும் வாய்மூர் வலஞ்சுழியும், கவ்வை வரிவண்டு பண்ணே பாடுங் கழிப்பாலை தம்முடைய காப்புக்களே. ௬

தெண்ணீர்ப் புனற்கெடில வீரட்டமுஞ் சீர்காழி வல்லந் திருவேட்டியும், உண்ணீரார் ஏடகமும் ஊறல்அம்பர் உறையூர் நறையூர் அரணநல்லூர், விண்ணோர் விடையான் விளமர் வெண்ணி மீயச்சூர் வீழி மிழலைமிக்க, கண்ணார் நுதலார் கரபுரமுங் காபாலி யாரவர்தங் காப்புக்களே. ௭

தெள்ளும் புனற்கெடில வீரட்டமுந் திண்டீச் சரமுந் திருப் புகலூர், எள்ளும் படையான் இடைத்தானமு மேயீச் சுரமுநல் லேமங் கூடல், கொள்ளு மிலயத்தார் கோடிகாவுங் குரங்கணின் முட்டமுங் குறும்பலாவும், கள்ளருந்தத் தெள்ளியா ருள்கி யேத்துங் காரோணந் தம்முடைய காப்புக்களே. ௮

சீரார் புனற்கெடில வீரட்டமுந் திருக்காட்டுப் பள்ளி திரு வெண் காடும், பாரார் பரவுஞ்சீர்ப் பைஞ்ஞீலியும் பந்தணைநல் லூரும் பாசூர் நல்லம், நீரார் நிறைவயல்சூழ் நின்றியூரும் நெடுங் களமும் நெல்வெண்ணெய் நெல்வாயிலும், காரார் கமழ்கொன்றைத் தாரார்க்கென்றுங் கடவூரில் வீரட்டங் காப்புக்களே. ௯

சிந்தும் புனற்கெடில வீரட்டமுந் திருவாஞ்சியமுந் திருநள் ளாறும், அந்தண் பொழில்புடைசூழ் அயோகந்தியு மாக்கூருமா ஆருமான் பட்டியும், எந்தம் பெருமாற் கிடமாவது இடைச்சுரமும் எந்தை தலைச்சங்காடும், கந்தங் கமழுங் கரவீரமுங் கடம்பூர்க் கரக் கோயில் காப்புக்களே. ௧௦

தேனார் புனற்கெடில வீரட்டமுந் திருச்செம்பொன் பள்ளி திருப்பூவணமும், வானோர் வணங்கும் மணஞ்சேரியும் மதிலுஞ்சை மாகாளம் வாரணாசி, ஏனோர்க ளேத்தும் வெகுளீச்சரம் இலங்கார் பருப்ப தத்தோ டேணார்சோலைக், கானார் மயிலார் கருமாரியுங் கறைமிடற்றார் தம்முடைய காப்புக்களே. ௧௧

திருநீர்ப் புனற்கெடில வீரட்டமுந் திருவளப்பூர் தெற்கேறு சித்தவடம், வருநீர் வளம்பெருகு மாநிருபமும் மயிலாப்பில் மன்னினார் மன்னி யேத்தும், பெருநீர் வளர்சடையான் பேணி நின்ற பிரமபுரஞ் சுழியல் பெண்ணாகடம், கருநீல வண்டரற்றுங் காளத்தியுங் கயிலாயந் தம்முடைய காப்புக்களே. ௧௨

திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்

பண் - தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

குண்டைக் குறட்பூதங் குழும அனலேந்திக்
கெண்டைப் பிறழ்தெண்ணீர்க் கெடில வடபக்கம்
வண்டு மருள்பாட வளர்பொன் விரிகொன்றை
விண்ட தொடையலான் ஆடும்வீரட் டானத்தே. க

அரும்புங் குரும்பையும் அலைத்த மென்கொங்கைக்
கரும்பின் மொழியாளோ டன்கை யனல்வீசிச்
சுரும்புண் விரிகொன்றைச் சுடர்பொற் சடைதாழ
விரும்பும் அதிகையுள் ஆடும்வீரட் டானத்தே. உ

ஆடல் அழல்நாகம் அரைக்கிட் டசைத்தாடப்
பாடல் மறைவல்லான் படுதம் பலிபெயர்வான்
மாட முகட்டின்மேல் மதிதோய் அதிகையுள்
வேடம் பலவல்லான் ஆடும்வீரட் டானத்தே. ௩

எண்ணார் எயிலெய்தான் இறைவன் அனலேந்தி
மண்ணார் முழவதிர முதிரா மதிசூடிப்
பண்ணார் மறைபாடப் பரமன் அதிகையுள்
விண்ணோர் பரவநின் றாடும்வீரட் டானத்தே. ச

கரிபுன் புறமாய கழிந்தார் இடுகாட்டில்
திருநின் றொருகையால் திருவாம் அதிகையுள்
எரியேந் தியபெருமான் எரிபுன் சடைதாழ
விரியும் புனல்சூடி யாடும்வீரட் டானத்தே. ரு

துளங்குஞ் சுடரங்கைத் துதைய விளையாடி
இளங்கொம் பனசாயல் உமையோ டிசைபாடி
வளங்கொள் புனல்சூழ்ந்த வயலா ரதிகையுள்
விளங்கும் பிறைசூடி யாடும்வீரட் டானத்தே. சு

பாதம் பலரேத்தப் பரமன் பரமேட்டி
பூதம் புடைசூழப் புலித்தோல் உடையாகக்
கீதம் உமைபாடக் கெடில வடபக்கம்
வேத முதல்வன்நின் றாடும்வீரட் டானத்தே. ௭

கல்லார் வரையரக்கன் தடந்தோள் கவின்வாட
ஒல்லை யடர்த்தவனுக் கருள்செய் ததிகையுள்
பல்லார் பகுவாய நகுவெண் தலைசூடி
வில்லால் எயில்எய்தான் ஆடும்வீரட் டானத்தே. ௮

நெடியான் நான்முகனும் நிமிர்ந்தானைக் காண்கிலார்
பொடியாடு மார்பானைப் புரிநூ லுடையானைக்
கடியார் கழுநீலம் மலரும் அதிகையுள்
வெடியார் தலையேந்தி யாடும்வீரட் டானத்தே. ௯

அரையோ டலர்பிண்டி மருவிக் குண்டிகை
சுரையோ டுடன்ஏந்தி யுடைவிட் டுழல்வார்கள்
உரையோ டுரையொவ்வா துமையோ டுடனாகி
விரைதோ யலர்தாரான் ஆடும்வீரட் டானத்தே. ௧௦

ஞாழல் கமழ்காழி யுள்ஞான சம்பந்தன்
வேழம் பொருதெண்ணீர் அதிகைவீரட் டானத்துச்
சூழுங் கழலானைச் சொன்ன தமிழ்மாலை
வாழுந் துணையாக நினைவார் வினையிலரே. ௧௧

திருச்சிற்றம்பலம்

இப்பதிகம் ஆண்டவன் பஞ்சகிருத்திய பரமானந்தத் தாண்டவம் செய்ததைக் குறிப்பது.

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

பண் - கொல்லிக்கௌவாணம்

திருச்சிற்றம்பலம்

தம்மானை யறியாத சாதியா ருளரே
சடைமேற்கொள் பிறையானை விடைமேற்கொள் விகிர்தன்
கைம்மாவி னுரியானைக் கரிகாட்டி லாட
லுடையானை விடையானைக் கறைகொண்ட கண்டத்
தெம்மான்ற னடிக்கொண்டென் முடிமேல்வைத் திடுமென்னும்
ஆசையால் வாழ்கின்ற அறிவிலா நாயேன்
எம்மானை யெறிகெடில வடவீரட் டானத்
துறைவானை யிறைபோது மிகழ்வன்போ லியானே. க

முன்னேயெம் பெருமானை மறந்தென்கொல் மறவா
தொழிந்தென்கொல் மறவாத சிந்தையால் வாழ்வேன்
பொன்னேநன் மணியேவெண் முத்தேசெம் பவளக்
குன்றமே யீசனென் றுன்னையே புகழ்வேன்
அன்னேயென் னத்தாவென் றமரரா லமரப்
படுவானை அதிகைமா நகருள்வாழ் பவனை
என்னேயென் னெறிகெடில வடவீரட் டானத்
துறைவானை யிறைபோது மிகழ்வன்போ லியானே. உ

விரும்பினேற் கெனதுள்ளம் வீடகிலா விதியே
விண்ணவர்தம் பெருமானே மண்ணவர்நின் றேத்தும்
கரும்பேயென் கட்டியென் றுள்ளத்தா லுள்கிக்
காதல்சேர் மாதராள் கங்கையா ணங்கை
வரும்புனலுஞ் சடைக்கணிந்து வளராத பிறையும்
வரியரவு முடன்றுயில வைத்தருளு மெந்தை
இரும்புனல்வந் தெறிகெடில வடவீரட் டானத்
துறைவானை யிறைபோது மிகழ்வன்போ லியானே. ௩

நாற்றானத் தொருவனை நானாய பரனை
நள்ளாற்று நம்பியை வெள்ளாற்று விதியைக்
காற்றானைத் தீயானைக் கடலானை மலையின்
தலையானைக் கடுங்கலுழிக் கங்கைநீர் வெள்ள
ஆற்றானைப் பிறையானை யம்மானை யெம்மான்
தம்மானை யாவர்க்கு மறிவரிய செங்கண்
ஏற்றானை யெறிகெடில வடவீரட் டானத்
துறைவானை யிறைபோது மிகழ்வன்போ லியானே. ௪

சேந்தர்தாய் மலைமங்கை திருநிறமும் பரிவு
முடையானை அதிகைமா நகருள்வாழ் பவனைக்
கூந்தல்தாழ் புனல்மங்கை குயிலன்ன மொழியாள்
சடையிடையிற் கயலினங்கள் குதிகொள்ளக் குலாவி
வாய்ந்தநீர் வரவுந்தி மராமரங்கள் வணக்கி
மறிகடலை யிடங்கொள்வான் மலையாரம் வாரி
ஏந்துநீ ரெறிகெடில வடவீரட் டானத்
துறைவானை யிறைபோது மிகழ்வன்போ லியானே. ௫

மைம்மான மணிநீல கண்டத்தெம் பெருமான்
வல்லேனக் கொம்பணிந்த மாதவனை வானோர்
தம்மானைத் தலைமகனைத் தண்மதியும் பாம்புந்
தடுமாறுஞ் சடையானைத் தாழ்வரைக்கை வென்ற
வெம்மான மதகரியி னுரியானை வேத
விதியானை வெண்ணீறு சண்ணித்த மேனி
எம்மானை யெறிகெடில வடவீரட் டானத்
துறைவானை யிறைபோது மிகழ்வன்போ லியானே. ௬

வெய்தாய வினைக்கடலிற் றடுமாறு முயிர்க்கு
மிகவிரங்கி யருள்புரிந்து வீடுபே றாக்கம்
பெய்தானைப் பிஞ்ஞகனை மைஞ்ஞவிலுங் கண்டத்
தெண்டோளெம் பெருமானைப் பெண்பாக மொருபாற்
செய்தானைச் செக்கர்வா னொளியானைத் தீவா
யரவாடு சடையானைத் திரிபுரங்கள் வேவ
எய்தானை யெறிகெடில வடவீரட் டானத்
துறைவானை யிறைபோது மிகழ்வன்போ லியானே. ௭

பொன்னானை மயிலூர்தி முருகவேள் தாதை
பொடியாடு திருமேனி நெடுமாறன் முடிமேல்
தென்னானைக் குடபாலின் வடபாலின் குணபாற்
சேராத சிந்தையான் செக்கர்வான் அந்தி
அன்னானை யமரர்கள்தம் பெருமானைக் கருமானி
னுரியானை அதிகைமா நகருள்வாழ் பவனை
என்னானை யெறிகெடில வடவீரட் டானத்
துறைவானை யிறைபோது மிகழ்வன்போ லியானே. அ

திருந்தாத வாளவுணர் புரமூன்றும் வேவச்
சிலைவளைவித் தொருகணையாற் றொழில்பூண்ட சிவனைக்
கருந்தாள மதக்களிற்றி னுரியானைப் பெரிய
கண்மூன்று முடையானைக் கருதாத வரக்கன்
பெருந்தோள்கள் நாலைந்து மீரைந்து முடியு
முடையானைப் பேயுருவ மூன்றுமுற மலைமேல்
இருந்தானை யெறிகெடில வடவீரட் டானத்
துறைவானை யிறைபோது மிகழ்வன்போ லியானே. கூ

என்பினையே கலனாக அணிந்தானை எங்கள்
எருதேறும் பெருமானை இசைஞானி சிறுவன்
வன்பனைய வளர்பொழில்சூழ் வயனாவ லூர்க்கோன்
வன்றொண்டன் ஆரூரன் மதியாது சொன்ன
அன்பனை யாவர்க்கு மறிவரிய வத்தர்
பெருமானை அதிகைமா நகருள் வாழ்பவனை
என்பொன்னை யெறிகெடில வடவீரட் டானத்
துறைவானை யிறைபோது மிகழ்வன்போ லியானே. க0

திருச்சிற்றம்பலம்

இத்தலம் நடுநாட்டில் கெடில நதிக்கு வடபக்கத்திலுள்ளது. திரிபுர விசயஞ்செய்த வீரட்டானம். சுவாமி பெயர்-அதிகைநாதர். தேவியார் - அதிகைநாயகி.

திருப்புகழ்

பரவுவரிக் கயல்குவியக்
குயில்கிளியொத் துரைபதறப்
பவளநிறத் ததரம்விளைத் தமுதூறல்
பருகிநிறத் தரளமணிக்
களபமுலைக் குவடசையப்
படைமதனைப் புடைகலவிப் பொருமாதர்
சொரியுமழைக் குழல்சரியத்
தளர்வுறுசிற் றிடைதுவளத்
துகிலகலக் ருபைவிளைவித் தநுராகம்
சொரிமலர்மட் டலரணைபுக்
கதிமதுரக் கலவிதனிற்
சுழலுமனக் கவலையொழித் தருள்வாயே
கருகுநிறத் தசுரன்முடித்
தலையொருபத் தறமுடுகிக்
கணைதொடுமச் சுதன்மருகக் குமரேசா
கயிலைமலைக் கிழவனிடக்
குமரிவிருப் பொடுகருதக்
கவிநிறையப் பெறும்வரிசைப் புலவோனே
திரள்கமுகிற் றலையிடறிப்
பலகதலிக் குலைசிதறிச்
செறிவயலிற் கதிரலையத் திரைமோதித்
திமிதிமெனப் பறையறையப்
பெருகுபுனற் கெடிலநதித்
திருவதிகைப் பதிமுருகப் பெருமானே.

விடமும்; வேலன மலரன விழிகளு
மிரத மேதரு மமுதெனு மொழிகளும்
விரகி னுலெழு மிருதன வகைகளும் இதமாடி

மிகவு மாண்மையு மெழினல முடையவர்
விளையு மாவியு முடனிரு வலையிடை
வெளியிலேபட விசிறிய விஷமிக ளுடன்மேவா
இடரு ருநினை நினைபவர் துணைகொள
இனிமை போலெழு பிறவியெ னுவரியி
னிடை கெடாதினி யிருவினை யிழிவினில் இழியாதே
இசையி னுடொறு மிமையவர் முனிவர்கள்
ககன பூபதி யிடர்கெட அருளிய
இறைநி னிரு புயமென உரைசெய அருள்வாயே
படரு மார்பினி லிருபது புயமதொ
டரிய மாமணி முடியொளி ரொருபது
படியி லேவிழ வொருகணை தொடுபவ ரிடமாராய்
பரவை யூடெரி பகழியை விடுபவர்
பரவு வார்வினை கெடவரு ளுதவியே
பரிவு பால்கட லரவணை துயில்பவர் மருகோனே
அடர வேவரு மசுரர்கள் குருதியை
அரக ராவென அலகைகள் பலியுண
அலையும் வேலையும் அலறிட எதிர்பொரு மயில்வீரா
அமர ராதிய ரிடர்பட அடர்தரு
கொடிய தானவர் திரிபுர மெரிசெய்த
அதிகை மாநகர் மருவிய சசிமகள் பெருமாளே.

—அருணகிரிநாதர்

உ

சிவமயம்

கருணாகரத் தொண்டைமானின் கல்வெட்டுகள்*

திருவதிகைச் சிலாசாதனம்

பொன்மகர தோரணமும் பூணணியும் பட்டிகையுந்
தென்னதிகை நாயகர்க்குச் சமைத்தான்—மன்னவர்கள்
தன்கடைவாய் நில்லாதார் தாள்வரைவாய் நின்றுணங்க
மின்கடை வேற்கலிங்கர் வேந்து. க

மின்னிலங்கு பொற்சதுக்க மேகடம்ப மென்றிவற்றைத்
தென்னதிகை நாயகர்க்குச் சேர்த்தினான்—தென்னவர்தந்
தோளோக்கும் வென்றி துரந்தே சுரனோக்க
வாளோக்குங் காலிங்கர் மன். உ

வில்லில் வெயிலனைய வீரட்டர் தந்திருநாள்
நல்லநெயி ரைஞ்ஞூற்று நாழியால்—வல்லி
யுடனாடக் கண்டான்தன் றொன்னலர்க்குக் கண்க
ளிடனாடச் செல்கூத்த னீண்டு. ௩

மண்டபமும் மாளிகையும் வானதிகை வீரட்டர்க்
கெண்டிசையு மேத்த வெடுத்தமைத்தான்—விண்டவர்கள்
நாள்வாங்கச் சேயிழையார் நாண்வாங்க நற்றடக்கை
வாள்வாங்குங் காலிங்கர் மன். ௪

மன்னொளிசேர் நூற்றுக்கால் மண்டபத்தை மால்வரையால்
மன்னதிக்க நாயகர்க்கு வந்தமைத்தான்—மன்ன

* இவை திரிபுர சம்ஹார மூர்த்தியின் எதிரிலுள்ள கற்றூணில் உள்ளன.

ரிசைகொடா தோட விகல்கொண்டாங் கெட்டுத்
திசைகொடாக் கூத்தன் தெரிந்து. ரு

மன்னுதிரு வீரட்டர் கோயில் மடைப்பளி
தன்னைத் தடஞ்சிலையா லேசமைத்தான்—தென்னர்
குடமலைநா டேறவது கொண்டவேற் கூத்தன்
கடமலைமால் யானையான் கண்டு. சு

அதிகை யரனுக் கருவரையாற் செய்தான்
மதிகை நெடுங்குடைக்கீழ் மன்னர்—பதிக
னாரியதிருச் சுற்று முடன்கவர்ந்த கூத்தன்
பெரியதிருச் சுற்றைப் பெயர்த்து. எ

அருமறைமா தாவி னறக்காமக் கோட்டங்
திருவதிகைக் கேயமையச் செய்து—பெருவிபவங்
கண்டா னெதிர்ந்தா ரவியத்தன் கைவேலைக்
கொண்டானங் தொண்டையர் கோ. அ

தென்னதிகை வீரட்டஞ் செம்பொனால் வேய்ந்திமையோர்
பொன்னுலகை மீளப் புதுக்கினான்—மன்னுணங்கு
முற்றத்தான் முற்றுநீர் வையம் பொதுக்கடிந்த
கொற்றத்தான் தொண்டையர் கோ. கூ

வானத் தருவின் வளஞ்சிறந்த நந்தவனம்
ஞானத் தொளியதிகை நாயகர்க்குத்—தானமைத்தான்
மாறுபடுத் தாருடலம் வன்பேய் பகிர்ந்துண்ண
கூறுபடுத் தான்கலிங்கர் கோ. க0

எண்ணில் வயல்விளைக்கும் பேரேரி யீண்டதிகை
யண்ணல் திருவிளங்க வாங்கமைத்தான்—மண்முழுதுந்
தன்கோன் குடைநிழற்கீழ்த் தங்குவித்த வேற்கூத்தன்
எங்கோன் மணவிலா ரேறு. கக

ஐயொருப தாயிரமாம் முகம்அதி கையிலே
மைவிரவு கண்டர்க்கு வந்தமைத்தான்—வெய்யகலி
போக்கினான் மண்ணைப் பொதுநீக்கித் தங்கோனுக்
காக்கினான் தொண்டையர்கோ னாங்கு. கஉ

அராப்புனையும் நம்மதிகை வீரட்டா னர்க்குக்
குராற்பசுவைஞ் ஞூறு கொடுத்தான்—பொரார்ப்புறஞ்சாய்
கண்டற்குத் தான்கொடுத்த காலிங்கன் காசினிக்குத்
தண்டருப்போல் நின்றளிப்பான் தான். கரு

வாரி வளஞ்சுரக்க வானதிகை நாயகருக்
கேரியு மூரு மிசைந்தமைத்தான்—போரிற்
கொலைநாடு வெஞ்சினவேற் கூத்தன் குறுகார்
மலைநாடு கொண்டபிரான் வந்து. கச

அம்மான் அதிகையிலே யம்பொற் றடமிரண்டும்
செம்மா மலரிலகச் செய்தமைத்தான்—கைம்மாவி
வீட்டநின்ற வெம்பரிமாக் கண்டருளென் றீண்டரசர்
காட்டநின்ற வேற்கூத்தன் கண்டு. கரு

அருளா கரநல்லூ ராங்கமைந்த வேரி
இருளார் களத்ததிகை யீசன்—அருளாரச்
சென்றமைத்தான் தென்னாட்டின் சாவேரின் றிண்செருக்கை
யின்றமைத்தான் தொண்டையர்கோ னங்கு. கசு

போதியி னீழற் புனிதற் கிறையிலிசெய்
தாதி யதிகையின்வா யாங்கமைத்தான்—மாதர்முலை
நீடுழக்கா ஞகத்து நேரலரைத் தன்யானைக்
கோடுழக்காண் கூத்தன் குறித்து. கள

மாசயிலத் தம்மைக்கு வாளதிகை வீரட்டத்
தீசன் இடமருங்கில் ஏந்திழைக்கு—மாசில்
முடிமுதலா முற்றணிகள் சாத்தினன் வேளாண்
குடிமுதலான் தொண்டையர் கோன். கஅ

ஆற்றற் படைவேந்தர் ஆற்ரு தழுந்திட்ட
மாற்றற்ற செம்பொன்னில் வாளதிகை—ஏற்றுக்
கொடியார்க்குக் கோலப் பரிகலமாச் செய்தான்
படியார்க்குஞ் சீர்க்கூத்தன் பார்த்து. கக

அண்ணல் அதிகையரற் கையிரண்டு நல்விளக்கு
மண்ணின் வறுமைகெட வன்றுநித்தக்—கண்ணகன்ற
ஞாலத் தறஞ்செய் நரலோக வீரன்பொற்
சிலத்தி னுலமைத்தான் சென்று. உ०

நீடும் அதிகையோன் நித்தன் பெருங்கூத்தை
யாடும் அரங்கமைத்தான் அன்றினுர்—நாடு
பரியெழுப்புந் தூளி பகல்மறைப்பச் சென்றுங்
கெரியெழுப்புந் தொண்டையா ரேறு. உக

ஈசன் அதிகையில்வா கீச னெழுந்தருள
மாசில் பெருங்கோயில் வந்தமைத்தான்—பூசல்
விளைவித்த வேளுடும் வெற்பனைத்துஞ் செந்தீ
விளைவித்தான் தொண்டையர் மன். உஉ

நல்யாக மண்டபத்தைச் செய்தான் நரபதியர்
பல்யானை யோடுணங்கப் பாவலர்க—ளெல்லாம்
புகுங்குடையான் தொண்டையர்கோன் பொன்மழையோடொக் [கத்
தருங்கொடையான் தானதிகை சார்ந்து. உங

அண்ண லதிகையரன் ஆகம் பிரியாத
பெண்ணினலாள் எண்ணுன்கு பேரறமும்—எண்ணியவை
நாளுள் செலவமைத்தா னன்னு வயவேந்தர்
வாளுள் கவர்கூத்தன் வந்து. உச

ஆட லமர்ந்தபிரான் ஆங்கதிகை வீரட்டம்
நீடுவதோர் கோயில் நினைத்தமைத்தான்—கோடிக்
குறித்தா ருடல்பருந்து கூட்டுண்ணக் காட்டி
மறித்தானந் தொண்டையர் மன். உரு

உ

சிவமயம்

பெரியநாயகியம்மை விருத்தம்

உரிய நாயகி யோங்கதி கைப்பதித்
துரிய நாயகி தூயவீ ரட்டத்கே
பிரிய நாயகி பேரருள் நாயகி
பெரிய நாயகி பெற்றியைப் பேசுவாம். க

வேறு

உலகந் தழைக்க வுயிர்தழைக்க வுணர்வு தழைக்க வொளிதழைக்க
உருவந் தழைத்த பசுங்கொடியே உள்ளத் தினிக்குந் தெள்ளமுதே
திலகந் தழைத்த நுதற்கரும்பே செல்வத் திருவே கலைக்குருவே
சிறக்கும் மலைப்பெண் மணியேமா தேவி யிச்சை ஞானமொடு
வலகந் தழைக்குங் கிரியையின்பம் வழங்கு மாதி பரையென்ன
வயங்கு மொருபே ரருளேயெம் மதியை விளக்கும் மணிவிளக்கே
அலகந் தழைக்குந் திருவதிகை ஐயர் விரும்பும் மெய்யுறவே
அரிய பெரிய நாயகிப்பெண் அரசே என்னை யாண்டருளே. உ

தன்னே ரறியாப் பரவெளியிற் சத்தாஞ் சுத்த அனுபவத்தைச்
சார்ந்து நின்ற பெரியவர்க்குந் தாயே யெமக்குத் தனித்தாயே
மின்னே மின்னே ரிடைப்பிடியே விளங்கு மிதய மலரனமே
வேதம் புகலும் பசுங்கிளியே விமலக் குயிலே யிளமயிலே
பொன்னே யெல்லாம் வல்லதிரி புரையே பரையே பூரணமே
புனித மான புண்ணியமே பொற்பே கற்ப கப்பூவே
அன்னே முன்னே யென்னேயத் தமர்ந்த அதிகை யருட்சிவையே
அரிய பெரிய நாயகிப்பெண் அரசே யென்னை யாண்டருளே. ந

—இராமலிங்க சுவாமிகள்

சிவமயம்

திருநாவுக்கரசு சுவாமிகள் தோத்திரம்

உமாபதி சிவாசாரிய சுவாமிகள் புராணசாரம்

போற்றுதிரு வாமூரில் வேளாண் தொன்மைப்
பொருவில்குறுக் கையரதிபர் புகழ ஞர்பால்
மாற்றருமன் பினிற்றிலக வதியா மாது
வந்துதித்த பின்புமரு ணீக்கி யாருந்
தோற்றியமண் சமயமுறு துயர நீங்கத்
துணைவரருள் தரவந்த சூலை நோயால்
பாற்றருநீ ளிடரெய்திப் பாடலிபுத் திரத்திற்
பாழியொழித் தரனதிகைப் பதியில் வந்தார். க

வந்துதமக் கையரருளால் நீறு சாத்தி
வண்தமிழால் நோய்தீர்ந்து வாக்கின் மன்னாய்
வெந்தபொடி விடம்வேழம் வேலை நீந்தி
வியன்சூலங் கொடியிடபம் விளங்கச் சாத்தி
அந்தமிலப் பூதிமகன் அரவு மாற்றி
அருட்காசு பெற்றுமறை யடைப்பு நீக்கிப்
புந்திமகிழ்ந் தையாற்றிற் கயிலை கண்டு
பூம்புகலூர் அரன்பாதம் பொருந்தி னாரே. உ

நம்பியாண்டார்நம்பி

இலைமா டென்றிடர்பரியா ரிந்திரனேயொத் தறுகுறை வற்றாலு
நிலையா திச்செல்வ மெனவே கருதுவர் நீள்சன் மக்கட லிடையிற்புக்
கலையார் சென்றர னெறியா குங்கரை யண்ணப் பெறுவர்கள் வண்ண
சிலைமாடந்திகழ் புகழா மூருறை திருநா வுக்கர செனபோரே.[த்தின்

பெரிய புராணம்

தூயவெண் ணீறு துதைந்தபொன் மேனியுந் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவருஞ் சிந்தையும் நைந்துருகிப்
பாய்வது போல்அன்பு நீர்பொழி கண்ணும் பதிகச் செஞ்சொல்
மேயசெவ் வாயும் உடையார் புகுந்தனர் வீதியுள்ளே. ச

மார்பாரப் பொழிகண்ணீர் மழைவாருந் திருவடிவும் மதுரவாக்கில்
சேர்வாகுந் திருவாயில் தீந்தமிழின் மாலைகளுஞ் செம்பொற் றாளே
சார்வான திருமனமும் உழவாரத் தனிப்படையும் தாமும் ஆகிப்
பார்வாழத் திருவீதிப் பணிசெய்து பணிந்தேத்திப் பரவிச் செல்வார்.

சிந்தை இடையறு அன்பும் திருமேனி தன்னில் அசைவும்
கந்தை மிகையாங் கருத்தும் கைஉழ வாரப் படையும்
வந்திழி கண்ணீர் மழையும் வடிவிற் பொலிதிரு நீறும்
அந்தமி லாத்திரு வேடத் தரசும் எதிர்வந் தணைய. சு

சிவப்பிரகாச சுவாமிகள்

எனக்கன்பு நின்பொருட் டெய்தாத தென்கொல் வெள்ளேறுடையா
றனக்கன்பு செய்திருத் தாண்டக வேந்தவித் தாரணியி [ன்
னினக்கன்பு செய்கின்ற வப்பூதி யைச்சிவ நேசமுறு
மினர்க்கன்பு செய்நம்பி யாரூர னேத்து மியல்பறிந்தே. எ

உற்று னலந்தவந் தீயினின் றுனல னூண்புனலா
வற்று னலனுகர் வுந்திரு நாவுக் கரசெனுமோர்
சொற்று னெழுதியுங் கூறியு மேயென்றுந் தன்பில்பதம்
பெற்று னொருநம்பி யப்பூதி யென்னும் பெருந்தகையே. அ

காஞ்சிப் புராணம்

இடையறுப் பேரன்பு மழைவாரு மிணைவிழியு முழவாரத்தின்
படையறுத் திருக்கரமுஞ் சிவபெருமான் றிருவடிக்கே பதித்தநெஞ்சு

ணடையருட்பெருந்துறவும்வாகீசப்பெருந்தகைதன்ஞானப்பாடற் [ம்.
ளுடையருச்செவ்வாயுஞ்சிவவேடப்பொலிவழகுந்துதித்துவாழ்வா

மருதவன புராணம்

வடமருவு தென்னிழலிற் கருணைவடிவாய்
விளங்கு வரதன் போல
விடமமிர்த மெனப்பருகிச் சூலந்தோண்
மிசையேற்று விடைமேற் கொண்டு
தடமருவு தரணியிடைத் திகழ்ந்திடுவா
ஹீசர்பத சரோரு கத்தைத்
திடமுறுமன் பொடுதினமுஞ் சிந்திப்போந்
துயர்க ளெல்லாஞ் சிந்திப்போமால். ௧௦

உ

சிவமயம்

திலகவதி அம்மை துதி

திருக்கயிலாய பரம்பரை திருக்கோவலூர் ஆதீனம்
திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீ ஞானியார் மடாலயம்
ஸ்ரீலஸ்ரீ சிவசண்முகமெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள்
பாடியது

உலகமெலாந் திருநீற்றி னொளிவிளங்க
மணிவிளங்க உவகை யோடும்
பலகலைசொ லைந்தெழுத்து விளங்கவரன்
பெயர்விளங்கப் பான்மை யோடு
தலம்விளங்க மறைவிளங்க அப்பருக்குத்
திருநீறு சாற்றித் தந்த
திலகவதி அம்மையா ரடிக்கமல
மிரண்டினையுஞ் சிரத்திற் சேர்ப்பாம். க

நீயிலையேல் சைவமெனுஞ் சமயமெங்கே
அப்பரெங்கே நேய மெங்கே
கோயிலையா மடைவதெங்கே குறிக்கோளுங்
கொள்வதெங்கே குருதா னெங்கே
காயிலைவேற் பரசினைத்தாங் கரனெங்கே
தேவாரங் கருத லெங்கே
மாயிருஞா லம்போற்றுந் திலகவதீ
நின்னடியை வணங்கி வாழ்வாம். உ

உடன்பிறந்தார் பாலன்பு முனைப்போல
யார்க்குண்டென் றுலக மோத
உடன்பிறந்த அப்பருக்காச் சுவர்க்கசுகந்
தனையிழந்தாய் உண்மை யீதே
உடலணியு மணிநீக்கி எவ்வுயிர்க்கு
மருள்கொண்டாய் உன்னுங் காலை
மடனொழித்த திலகவதீ நின்னடியைப்
பெரியோர்கள் வணங்கி வாழ்வார். ங

அப்பருமே நினையடைந்து மாசொழிந்தார்
நோயொழிந்தார் அளவில் சீர்த்தி
செப்பருந்தே வாரஞ்சொல் திறம்பெற்றார்
சிவஞானத் திறம்பெற் றுய்ந்தார்
ஒப்பதிக மில்லாத இறைநாவுக்
கரசென்ன ஓதப் பெற்றார்
எப்பொழுது முனைநினைத்துத் திலகவதி
யம்மைநலம் எய்தி வாழ்வாம். ௪

அடியேனை யாண்டருளும் அப்பரையே
எளியேங்கட் களித்தாய் போற்றி
கொடியேனை வாழ்விக்குந் தமிழ்மறையை
யாமோதக் கொடுத்தாய் போற்றி
அடிமுடியு மில்லாத சிவநெறியை
யாம்பேண அளித்தாய் போற்றி
பொடியேறு திருமேனித் திலகவதி
யம்மையே போற்றி போற்றி. ௫

கதிதனை யடைய வனந்தனை அடைவர்
கடலொடு கலந்துமேம் பட்ட
நதிதனை யடைவர் மலையினை யடைவர்
நானிலம் வலம்வரு வார்கள்
விதியிது என்னப் பலபல செய்வர்
விளங்கா னிவையெலாஞ் செய்யேன்
அதிகைவாழ் திலக வதிப்பெய ரம்மை
அடைவனே நீகதி யாக. ௬

திலகவதித் தாயே திருவுள மிரங்காய்
உலகிற் பிறவா வுயர்வை—அலகிலா
இன்பத்தை யானடைய இன்றேயருள் செய்வாய்
துன்ப மகலத் தொலைத்து. ௭